OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
7 OCT 1911
54
MADRAS.

54
4-1914

SRI

# KASIMAHATHMIYAM

54
4·1914

ஸ்ரீ காசி மாகாத்மியம்.

A. V. AIYER & Co.,
Book-Sellers and Publishers,
TRIPLICANE, MADRAS.

1911.

Registered copy right] [Price annas 4.

உ

# வியாசபகவான் அருளிச்செய்த

# ஸ்ரீகாசி மாகாத்மியம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
7 - OCT 1911
MADRAS.
54
4-1911

இஃது

இராமாயணம். நடேச சாஸ்திரிகள் அவர்களால்,

ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து,

வரகவி. திரு. அ. சுப்பிரமணிய பாரதியின்

உதவியைக்கொண்டு

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

—[*]—

சென்னை

திருவல்லிக்கேணி

எ. வி. ஐயர் அண்டு கம்பெனியாரால்

பிரசுரிக்கப்பட்டது.

91013

செப்டம்பர்

1911

காபிரயிட் செய்தது] [விலை அணா 4

PRINTED BY

The Kalvi Pragasam Press,

Triplicane, MADRAS.

# முகவுரை.

—(*)—

உலகத்தில் மற்றப்பாஷைகளிலுள்ள புத்தகங்களைவிட ஸம்ஸ்கிருதபாஷையிலுள்ள புத்தகங்களுக்கு, நமது தேசமேயன்றி ஆங்கில தேசத்திலும் ஸம்ஸ்கிருதபாஷை பயின்ற ஆங்கிலேயர்கள் நல்ல கௌரவங்கொடுத்து வருகிறார்கள். ஏனெனில், அவைகளை யியற்றியவர்கள் திரிகால ஞானிகளாகவும் ஆஸ்திகோத்தமர்களாகவும் சாஸ்திரங்களின் கரைகண்டவர்களாகவுமிருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உலகம் வரவர இந்த நிலைமையுறும் என்பது புலப்படுமாதலால், அதற்குத் தக்கவாறு சுருதி, யுக்தி, அனுபவம் இவைகளை யொட்டி நூலியற்றி யிருக்கின்றனர். இது கொண்டே அவைகள் பிறநாட்டாருடைய நன்மதிப்பையும் பெறுகின்றன என்போம்.

இப்பொழுது அத்தகைய நூல்களை, ஸம்ஸ்கிருத பாஷையறியாத நம்நாட்டார் அறிந்துய்ய வேண்டிய அவசியங் கருதிச் சிலர் மொழிபெயர்த்து அச்சிட்டு வருகின்றனர். அப்படிப்பட்ட பயன்கருதியே இச்சிறுபுத்தகமும் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகும்.

இதில் ஸ்ரீகாசிக்ஷேத்திரம், ஸ்ரீ விசுவேசர், கங்கை இவைகளின் மாகாத்மியம் பல சரித்திரங்களின் வாயிலாக வெளியிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீகாசியில்வசித்து விசுவேசரைப்பூசித்தவரின் உண்டாகும் பலனையும் அங்குவசிக்க இன்னாரே அருகரென்பதையும் இன்னார் இவ்வளவு நாள் வசிக்கவேண்டுமென்பதையும் காசியேயன்றி மற்றவிடங்களிற் செய்யும் பாபபுண்ணியங்களுக்கும் காசியில் செய்யும் பாபபுண்ணியங்களுக்குமுள்ள வித்தியாசமும் அவைகளுக்குரிய பலாபலன்களும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகம் காசிக்குப் போகவேண்டுமென்கிற அவாவுடையாருக்கும் போய்த் தரிசிக்கவேண்டிய முறை தெரிய

விரும்புவார்க்கும் பாராயண பலனை அடைய இச்சிப்பாருக்கும் மிகுதியும் பிரயோசனப்படுவதாகும். இது குழந்தைகளும் இனி துணரத்தக்க எளியநடையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதனை ஸம்ஸ்கிருதபாஷையில் இயற்றியவர் வேதவியாஸ ரென்னும் மகானெனின், இதன் மகிமையை எடுத்துரைப்பது அவசியமின்றாம். இப்புத்தகத்தை வெளியிட்ட எ. வி. ஜயர் அண்டு கம்பெனியார், ஸ்ரீமத்பாகவதம், ஆநந்த ராமாயணம் என்னும் இவ்வரிய நூற்களை மிகவும் சிரமமெடுத்துக் கொண்டு, தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இவரது முயற்சி சத்கிரந்தங்களில் பயன்படுகின்றமையால், நமது தமிழ் உலகம் இவர்கள் பொருட்டு நன்றி செலுத்தக் கடமைப்பட்டதாகும்.

வரகவி - திரு - அ. சுப்பிரமணிய பாரதி.

உ

# ஸ்ரீகாசி மகாத்மியம்.

OFFICE ... 7-OCT ... MADRAS.

முன்னொரு சமயம், லோமசர் முதலிய முனிவர்கள் ரேவையென்னும் நதியில் மணற் பாங்கான ஓரிடத்தில் சுகமாகவீற்றிருந்த பிருகுமகா ரிஷியிடம் சென்று அவரை நமஸ்கரித்து, "சகலதர்மங்களையும் அறிந்த பகவானே! முத்திபெற விருப்பங் கொண்டவரும் மனமடங்கப்பெற்றவருமாகிய எங்களுக்கு வேதங்களின் இரகசியமான கருத்துடன் அந்த முத்திக்குக் காரணமாயுள்ளதை உபதேசிக்க வேண்டும். கருணாநிதியே! நாங்கள் மாயையால் அறிவிழந்து விட்டோம். உண்மை புணர்ந்தோமில்லை. ஆகையால் தத்துவ வரலாற்றைக் கூறவேண்டும்" என்று விநயத்துடன் கேட்டார்கள். தத்துவ உண்மையறிந்த பிருகுமகாமுனிவர், லோமசர் முதலிய முனிவர்களுக்கு எதைத் தெரிவித்தனரோ அதை நான் உங்களுக்குக் கூறுகிறேன். நைமிசாரண்யவாசிகளாகிய சௌனகர் முதலிய முனிவர்களே! கேளுங்கள் என்று சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினர்.

மகாபாக்கியம் செய்தவர்களே! தவத்தையே தனமாகக் கொண்டவர்களே! நல்லது; தத்துவமுபதேசிக்க அல்லவா என்னைக் கேட்டீர்கள்; நான் எப்படி சிரவணம் செய்து தெரிந்து கொண்டேனோ அப்படியே தெரிந்தவரையில் பிர்மதேவரை வணங்கிக் கூறுகின்றேன்.

ஏ தபோதனர்களே! நீங்கள் கேட்டதற்கு மறுமொழி கூற உத்தேசித்தலே பெரிது. பராசிவ தியானத்தையே துணையாகக்கொண்டு ஆரம்பம் செய்கின்றேன்.

முனிவர்களே! மனத்தாசையை யொழிப்பதும், ஆசையில் எற்பட்டதும், வியப்பைத் தரத்தக்கதும் அறிவின் அபிவிர்த்திக்கு

ஆதாரமானதுமான ஓர் இதிகாசத்தை அந்தக்கரணசுத்தியோ டிருந்து கேளுங்கள்.

பிரளயகாலத்தில், சூரிய சந்திரர்களும் பிருதிவி முதலிய பூதங்களும் நாசமடைந்து விஷ்ணுவின் மாயையால், மூன்று குணங்களும் சமமடைந்த வெகுகாலத்திற்குப் பிறகு சிருஷ்டி காலமாரம்பித்ததும் பகவானுடைய மாயை உலகத்தைச் சிருஷ்டிக்க விரும்பியது. பகவான் அந்தமாயையினிடம் மனதைச் செலுத்தினர். அப்பொழுது அவரிடம் ஆகாயமும், ஆகாயத்தினிடமிருந்து வாயுவும் வாயுவிலிருந்து தேயுவும் தேயுவிலிருந்து அப்பும், அப்பிலிருந்து பிருதிவியு முண்டாய் அவைகளொவ்வொன்றும் முறையே ஒன்றுக்கொன்று மேன்மையடைந்தன.

சர்வேசுவராகிய பிரபு இவ்விதம் முறையே பூதங்களைச் சிருஷ்டித்து பக்தர்களை அனுக்கிரகிக்கும் பொருட்டு கருநெய்தல் தளம்போன்ற திருமேனியுடனும், நான்கு கைகள் தாமரை மலரையொத்தநேத்திரங்கள் இவைகளுடனும் பீதாம்பரதாரியாயும் லீலாதேகத்தை அடைந்தார். அவருடைய நாபியில் கமலமலர் ஒன்று தோன்றியது. அதன் நான்கு திசைகளிலும் நான்கு முகந் தோன்றி பிரமதேவராயினர். அவர் ஒருவரும் அறியாதவண்ணம்விஷ்ணுவின் நாபிகமலத்தில் தோன்றினரெனினும் அகங்காரமடைந்து தம்மையே பூதங்களுக்கு ஈசனுகவும் தாமே உலகங்களை படைக்கிக்கொள்பவராகவும் கருதினர். அப்போது பகவானுகிய மகாவிஷ்ணு பிரமதேவனை அஞ்ஞான முடையவனெனவறிந்து அவரெதிரில் நீயாரெனக் கேட்டுக் கொண்டே தமது சுயரூபத்தைக் காட்டினர். அதைக்கண்டு பிரமதேவர், "நான்தான் பூதங்களுக்கு ஈசுவரன் உனக்குக் காரணமாயிருப்பவன். யாவும்என்னுல் படைக்கப் பட்டவைகள். நீ என்னை உண்மையாகத்தெரிந்து கொள்ளவில்லை" என்ருர். நாராயணன், "ஆச்சரியம்! அவித்தையின்மகிமையே மகிமை! இந்தப் பிரமன் என் நாபியில் உண்டானவன்; அப்படியிருந்தும்

அவன் கொண்டுள்ள மூடபுத்தியால் என்னை ஈசுவரனென்று அறிந்து கொள்ளவில்லை;" என்று கருதி "ஏ பதுமயோனியே! நீ உற்பத்தியானதற்குக் காரணமாகிய கமலமலரைப் பார்த்தேனும்! உனக்கு நான் குருவென்பதை யுணர்ந்து சரணமடைவாய்" என்றார்.

இப்படி யிருவரும் விவாதம் செய்து கொண்டதுமன்றி நான்தான் முதல்வன், நான்தான் முதல்வன் என்று கூறி வாய்ச் சண்டை செய்தார்கள். பின்னர் படபடப்புண்டாய்த் தத்தம் மகிமையால் உண்டான அஸ்திரங்களையும் ஆயுதங்களையும் பிரயோகித்துக்கொண்டு அமர்புரிந்தார்கள். பிறகு முத்கலம் என்ற ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டார்கள். இவ்விதம் நூறுவருஷ காலம் சென்றது. இருவருள் ஒருவரும் தோல்வியடைந்தார்களில்லை.

இப்படி யிருக்கையில் தங்களுக் கெதிரே தேஜோமயமாயும் பதினாயிரம் சரத்காலசந்திரனுக்குச் சரிசமானமாயும் வியாபகமாயும் விளங்கும் ஓர் ஜோதியைக்கண்டு ஆச்சரியமும் அச்சமுமுற்று, இன்னது செய்வதெனத் தெரியாமல், இதோ பெரிதாகிய ஜோதி ஒன்று நம் முன்னிலையில் தெரிகிறதே; இதன் காரணமென்னவென்று இருவரும் ஆலோசித்துக்கொண்டு நின்றார்கள். அச்சபயம், செந்நிறம்பொருந்திய ஜடையுடனும் சர்ப்பம் மண்டையோடு இவைகளை மாலையாகக்கொண்டு சந்திரன்போல் நிர்மலமான காந்தியுடனுங்கூடிய ஓர் புருஷன் எதிர் தோன்றி நிற்கக்கண்டார்கள். அவரைக்கண்டதும் பிரமன் விஷ்ணு இருவரும் இவர்தான் பரமபுருஷனென வறிந்து வேதங்கூறியவைகளை யெடுத்துத் தோத்திரஞ் செய்யலாயினர். பிறகு ஈசன் அவர்களைநோக்கி "நீங்கள் இங்கு பிரகாசியாநின்ற லிங்கத்தைக்கண்டு தரிசித்தீர்கள். ஸ்தோத்திரமும் செய்தீர்கள். அதனால் நான் பரமபிரீதி யடைந்தேன். வேண்டியவரங்களைக் கேளுங்கள். தருகின்றேன்" என்றார். இதைக் கேட்டதும் அவ்விருவரும், "ஏ சதாசிவ! எங்களுக்கு

உன்னிடத்தில் மாறுத அன்புண்டாகவேண்டும். இதைத்தவிர வேறு வரம் வேண்டேம். பிரபுவே! எங்கள் மனதிலிருக்கும் ஓர் சந்தேகத்தை நிவர்த்திசெய்ய வேண்டும். நீர் தேஜோமயமான இந்தலிங்கத்திலிருக்கிறீரே இதன்பெயரென்ன? இது எந்த உருவத்தைச்சேர்ந்தது? எதை ஆசிரயித்திருக்கிறது. மகேதேவா! இவைகளனைத்தையும் கிருபை கூர்ந்து தெரிவிக்க வேண்டும் என்றார்கள்.

மகாதேவர், பிர்மவிஷ்ணுக்களே! நீங்கள் பார்க்கும் இந்த லிங்கம் விசுவேசுவரலிங்க மெனப்பெயர் பெறும். இது சச்சிதாநந்த சொரூபமுள்ளது. லிங்கசரீரம் லயமானபின் பரத்துடன் பிரிவினையுண்டாம்படி செய்கின்றமையால் இதற்கு லிங்கம் என்னும் பெயர் ஏற்பட்டது. இது முத்திசாதனமானது. இது எங்கும் வியாபக முற்றிருப்பினும் விகாரத்தை யடையாதது. ஆகாயம் அபரிச் சின்னமானதாயினும் சப்தகுண முடையதென்று சொல்லப் படுவது போல், இந்தலிங்கமும் தானேபரிச்சின்னமாகிறது. இதன் மகிமையை என்னாலும் கூட வர்ணிக்க முடியாது. ஆயினும் நித்தியானந்த சொரூபமுள்ள இதன் மகிமையைக் கூறுகிறேன் கேளுங்கள்.

இங்கு மரணமடைந்தவர்கள் சச்சிதாநந்த சொரூபத்தை யடைகிறார்கள். சந்தேகமில்லை. இந்த இடத்தில் பிரவேசித்தவுடன் பாபங்க ளொழிந்து புண்ணியம் பெருகும். இது முத்திக்குரியஸ்தானம். நான் இங்கு மரணமடைபவர்களுக்கு மகாவாக்கியத்தை உபதேசித்துக்கொண்டிருக்கிறேன். மாவாக்கியத்தின் உபதேசம் பெறுதவரையில், பிரமத்துக்கும் ஆத்மாவுக்கும் ஏகத்வம் சித்திபாது. அது தோன்றுதொழியின் முத்தியில்லை. ஆகையால் தங்களுக்குரிய தர்மங்களைச் சரிவர அநுஷ்டிப்பவர்கள் யாவராயினும் அவருக்கு நியமமாக உபதேசம் செய்கின்றேன். இங்கு பிராணனை யிழந்தவன் உத்தமன், மத்திமன், அதமன், பண்டிதன், மூர்க்கன்

அந்தணன் சண்டாளன் இவர்களில் எவரெனினும் சரி. மோக்ஷம் கிடைக்கும். இந்த லிங்கம் ஆசிரயமற்றது. விசுவேசருக்கு முக்கியமான ஆசிரயமாக விளங்குவது. நீங்களும் உண்மையை அறிந்துகொள்ளுங்களென்றார்.

பிறகு விசுவேசர் அந்தர்த்தானமடைந்தார். விஷ்ணுவும் பிரமாவும் கோபத்தை யொழித்துத்தத்தம் தொழிலிற்பிரவேசிக்கலாயினர். ஏ முனிவர்களே! விசுவநாதருடைய மகிமையைச் சொல்லிமுடித்தேன். விஷ்ணுவும் பிரமனும் தரிசித்த லிங்கத்தின் மகிமையைத்தான் வேதசாஸ்திரங்கள் காசி யென்று முறையிடுகிறது. அங்கை நெல்லிக் கனிபோல் இங்கு மோக்ஷம் கிடைக்கும். இந்தக்காசியைப் பார்த்தமாத்திரத்தில் அளவிறந்த பாபங்களு மொழியும்" என்றார். இதைக்கேட்டதும் முனிவர்கள் மனமுவந்து "ரிஷிகளுக்குள் சிறந்தவராகிய பிருகுமகாமுனிவரே! உம்மிடமிருந்து காசியின் மகிமையைக் கேட்ட நாங்கள் இப்போதுதான் எங்கள் தவத்தின் மகிமையை யடைந்தவர்களானோம்; எல்லோரும் நன்மைபடைவதன் பொருட்டுக் காசியின் மகிமையை விளக்கும் பிராமணசிரேஷ்டரே! காசி எப்படிப்பட்ட மகிமையுடையது? அதையெப்படித் தெரிந்துகொள்வது? அது எவர்களால் அடையக்கூடியது? அதன் மகிமை எவ்வளவு? எந்த உபாயத்தால் அதையடையக்கூடும்? இவையாவற்றையும் இச்சமயம் தயைசெய்து விசேஷங்களோடு தெரிவிக்க வேண்டும். எங்களுடைய செவிகளாகிய பாத்திரங்கள் உமது வார்த்தைகளாகிய அமுதத்தைப் பெற விரும்புகின்றன" என்றார்கள்.

இதைக் கேட்டதும் பிருகுமுனிவர், சிரவணம் செய்த மாத்திரத்தில் ஜனங்களின் பாபங்களைப்போக்கும் ஸ்ரீவாரணாசியின் மகிமையை விவரிக்கும் என்வாய் மொழியைச் சாவதானமாக விருந்து கேளுங்கள்.

கிருதயுகத்தில் ஸ்ரீமானும் மகாபலம்பொருந்தியவனுமான பூரிதியும்னன் என்னும் ஓர் அரசன் பூமண்டலத்தைப் பரிபா

வித்து வந்தான். இந்த அரசனுக்குத் தாமரை மலரையொத்த நேத்திரங்களுள்ள ஸ்திரீகள் லக்ஷம்பேரிருந்தார்கள். அவர்களுக்குள் சிறந்தவள் விபாவரி யென்பவள். சிறுத்த இடையுள்ளவள். இந்த விபாவரியிடத்தில பூரிதியும்னன் மிகவும் அன்புவைத்து வனங்களிலிருந்துகொண்டு இந்திரனும் இந்திராணியும்போல் அவளுடன் கிரீடித்து வந்தான்.

அந்தணர்களே! இவ்விதமிருந்துவரும் அரசனுக்கு இராஜ்யத்தின் நினைவேகிடையாது. ஏனெனில் இவன் அறிவு மன்மதனுடைய வசமாயிருக்கின்றதல்லவா? இப்படியிவன் மன்மத கிரீடையில் மூழ்கியிருந்தமையால் இவனுடைய இராஜ்யத்தையும் மனைவிகளையும் இவனது நண்பர்களும் பகைவர்களும் சேர்ந்து களவில் அபகரித்துக்கொண்டார்கள். இதனையறிந்த பூரிதியும்னன், கத்தியைமட்டும் ஆயுதமாகக் கையிற்கொண்டு விந்திய பருவதத்திற்கு அருகாமையிலுள்ள அரண்ணியத்திற்கு விபாவரி என்றவளுடன் சென்றான். வழியில் பசியாலும் தாகத்தாலும் வருத்தப்பட்டுக்கொண்டு தன்மனைவியுடன் விந்தியபருவதத்திற்கருகே செல்ல அநேகநாட்கள் சென்றன. அப்படிச் செல்லுகையில் வழியே மான்கூட்டங்களைத் தொந்தரவுசெய்து கொண்டுலாவும் புலிக்குட்டிகளின் கூட்டத்தைக் கண்டுகொண்டு பார்த்தும் யானை சிங்கம் எருமை இவைகளின் வீறிடுதலையும் கர்ச்சனையையும் ஹூங்காரசப்தங்களையும் கேட்டும் வியாகுலமுற்ற விபாவரி தன் நாயகனைப்பார்த்து "அரசனே! மானிடசஞ்சாரமற்றதும் துஷ்ட ஜந்துக்கள் நிறைந்ததுமான இந்தவனத்திற்குச் சென்று நாம் என் வாழவேண்டும்; பசிதாகம் முதலிய துன்பங்களோ மிகவும் உபத்திரவிக்கின்றன. உமது முகமும் வாடிப்போயிற்று. எனக்கு அவ்வளவு ஏற்படவில்லை. அரசனே! நீர் பெறுதற்கரிய ஐசுவரியத்தைப்பெற்றும், அதை அநுபவிக்கப் புண்ணியஞ்செய்யவில்லை. காமத்தைமட்டும் பாராட்டி வந்தமையால், உமது காலம் வீணாகக்கழிந்தது. எவன் தருமத்தையும்

ஆர்த்தத்தையும் விட்டுக் காமத்தைப் பாராட்டுகிருனே அவன் உம்மைப்போல் மிகவும் துக்கத்தையடைவான்" என்ருள்.

இங்ஙனம் விபாவரி சொல்லப் பூரிதியும்னன் தான் செய்த பாபத்தைக் கருதி மனம் நோந்தானல்லது தன் மனைவிக்கு ஏதும் பகர்ந்தானில்லை. பசிதாகத்தால் சகித்தற்கரிய வருத்தத்தி லாழ்ந்த இவ்விருவரும் ஐந்தாவது நாள் சாலங்காயனமுனிவரின் ஆச்சிரமம் வந்தார்கள். சாலங்காயன முனிவர் அவ்விருவரையும் அன்போடு வரவேற்று அவர்களுக்குக் கனிவர்க்கங்கள் கொடுத்துபசரித்தார். அரசனும் அவன் மனைவியும் அவைகளைப் புசித்துப் பசியாறி அந்த முனிவரிடம் தங்களுக்குக் கஷ்டம் நேரிட்டவாலாற்றைச் சொல்லிக்கொண்டு ஒருநாளிரவைக் கழித்தார்கள். பிறகு அங்கிருந்து புறப்பட்டு அந்த வனமெங்கும் வெகுநாள் சஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் விந்தியமலைக்கருகே வருந்தருவாயில் கனிவர்க்கங்களேதுவும் கிடைக்காமையால் அரசன் பசிபொறுக்கமாட்டாமல முகவாட்டமுற்று வருந்தி யெங்குந் தேடினன். பசியைத்தணிக்கக் கனிகளேதுவும் கிடைக்கவில்லை. ஆதலால் அரசன் புத்திமாறி இராக்கதத்தன்மை படைந்து மானையொத்த விழியினையுடைய இராஜஸ்திரீயாகிய விபாவரியைக் கொன்று புசிக்கக் கருதினன். இதை விபாவரி தெரிந்து கொண்டாள். உடனே தன் தேகத்தை அரசனுக்கு ஆகாரமாகக் கொடுக்கத் துணிந்து எ "ராஜேந்திர! உமக்கு இப்போது பசி பிராணனைப் போக்கக்கூடியதாய் உபத்திரவிப்பதாகத் தெரிந்து கொண்டேன். ஆகையால் என் சரீரத்தை நறுக்கி ஆகாரமாகக் கொள்ளுங்கள். சிறிதும் தாமதிக்கவேண்டாம். பிரபுவே! எனக்குக் கொஞ்சமேனும் துக்கமில்லை; மாதர்களுக்கு இந்த உலகத்தில் புருஷனைத்தவிர வேறு தருமமில்லை. இது விஷயத்தில் புராணமறிந்த பெரியோர்கள் தெரிவிப்பதுயாதெனில், "ஆபத்துக்காலத்தை யுத்தேசித்துப் பொருளைக்காக்கவேண்டும். அந்தப் பொருளால் மனைவியை இரக்ஷிக்க வேண்டும். தாரங்களாலும் பொருளாலும் தன்னை எப்போதும் இரக்ஷித்துக்

கொள்ளவேண்டும்." என்று கூறியிருக்கின்றனர். ஆகையால் சிறிதும் யோசிக்க வேண்டாம் என்றுரைத்தான்.

இங்ஙனம் தருமபத்தினி கூறியதும் அதிபலசாலியாகிய பூரிதியும்னன் தன் பிரிய நாயகியைக்கொன்று அந்தப்பிரேதத்தின் மாம்சத்தைப்புசிக்கப் பிரயத்தனம் செய்தான். அச்சமயத்தில் அங்குமிங்கு மோடிக் கொண்டிருந்த சிங்கங்கள் சில அவ்விடம் வருவதைக் கண்டஞ்சித் தன்னுயிர் காத்துக் கொள்வதன் பொருட்டு அங்கிருந்து ஓட்டம் பிடித்தான். ஓர் யோசனை தூரம் வரும் வரையில் திரும்பிப்பார்க்கவில்லை. புல்லரிசிகளைப்பொறுக்கிக் கொண்டு போகிறவர்களும் வேதவேதாங்கங்களின் கரைகண்டவர்களும் பிரமசாரி விரதம் பூண்டவர்களுமாகிய நான்கு பிராமணர்களைக் கண்டான். அந்த மகாபாவியாகிய அரசன உடனே அவர்களிடம் விரைந்து சென்று அவர்களைக் கொன்று அவர்கள் கொண்டுவந்த புல்லரிசிகளைப் பிடுங்கிக்கொண்டு அதைப்புசிக்கக் கருதி அங்கோர் இடத்தில் உட்கார்ந்தான். அப்பொழுது அவர்களுடைய உபவீதங்களையும மான் தோல்களையும் இன்னும் மற்றும் பிராமணர்களுக்குள்ள அடையாளங்களையும் கண்டு "அந்தோ! இவர்கள் அந்தணர்களாயிற்றே! இவர்களைக் கொன்று விட்டேனே! பிரமஹத்தி தோஷம் சம்பவித்து விட்டதே! என்று வருத்தமுற்று நான் வெகு நிந்தையான காரியத்தைச் செய்தேன். அந்தணர்களைக் கொன்றேன். பதிவிரதையாகிய மனைவியை வதைத்தேன் இந்தப் பாழுமுயிரைக் காக்கக் கருதி எந்தப் பிராயச்சித்தவிதியிலும் ஏற்படாத பாபத்தையன்றோ செய்தேன். ஒரு பிரமஹத்தியே பெரும் நரகத்தைக் கொடுக்கும் என்பார்கள். இவைகளுக்கு நூறுகற்பம் வரையில் நரகத்தில் இருக்கவேண்டும்போலல்லவா யிருக்கின்றது ஸ்திரீஹத்திபாபம் ஐம்பதுகற்பம்வரையில் நரகத்தைக்கொடுக்குமென்பார்கள். நான் பிராமணர்களையு மன்றோ கொன்றுவிட்டேன். எனக்கு முன்னோர்களுமல்லவா என்னுடன் நரகத்தில் விழுவார்கள் போலிருக்கிறது. அல்லது விழுந்துவிட்டார்களோ

தெரியவில்லையே. இனி நான் என்னசெய்வேன். அந்தோ! கணக்கற்றதான இந்தப் பாபம் பஞ்சு சாம்பலாவதுபோல ஆனாலல்லவா நான் சுகமுறுவேன். அந்தோ! இதற்கென்னசெய்யப்போகிறேன் என்று கருதி வருத்தமுற்றான்.

இவ்விதம் பூரிதியும்னமகாராஜன் ஆலோசித்துக்கொண்டு அந்த அரண்யத்தில் பிரமித்துச் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு ஆச்சிரமம் கண்டான். அது சாலங்காயன ரிஷியின் வம்சத்திற் பிறந்த ஓர் ரிஷியினுடையது. அவரைக் கண்டு வெகு தூரத்திலேயே நின்று நமஸ்கரித்து நடந்தவைகளை பகரோணாத்துக்கத்தோடு பகர்ந்தான்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதும்முனிபுங்கவர் "அடேபாவி! இந்த இடத்தை விட்டகல்; இங்கு ஓர் கணமும் தாமதிக்காதே என உரைத்து முகத்தையுந் திருப்பிக்கொண்டார். அரசன் மிகவும் துக்கமடைந்து, தான் செய்த கொடும்பாபத்திற்குப் பிராயச்சித்தந் தெரிவிக்க வேண்டுமென அவரைப் பலபடியாகவும் கேட்டான். இங்ஙனம் தன் குற்றத்தைக் கூறி வருந்தும் அரசனுக்கிரங்கிய முனிவர் சற்று ஆலோசித்துக் கூறுகிறார்.

"மகாராஜனே! சகலபாபங்களையும் நிவர்த்திக்கும் காசி க்ஷேத்திரம் சென்று உன் பாபத்தை யொழித்துக்கொள். அரச! கறுப்பு நூலால் நெய்யப்பட்ட ஆடை புனைந்து சண்டாளனைப் போல் செல். நீ காசியை யடைந்ததும் அந்தக் கறுப்பு வஸ்திரம் சந்திரனையொத்த தாவளியமாயிருக்கும். அப்பொழுதுன் பாபம் உண்மையில் தொலையுமென்பதற்கு நம்பிக்கையுண்டு" என்றார்.

பூரிதியும்னன் முனிவர் உபதேசத்தைக்கேட்டு மகிழ்வுற்று அவரை வணங்கி அவரிடம் விடைபெற்றுக்கொண்டு, கறுப்பு நூலாலான ஆடையொன்று தேடி உடுத்துக்கொண்டு ஏழுநாள் இரவும் பகலும் நடந்து ஸ்ரீவிசுவேசருடைய ஆலயமிருந்தழகு செய்வதாலும், சூரிய கிரணங்களையும் மங்கச்செய்யும் இரத்தினமயமான மாளிகையின் காந்தியால் சோபிப்பதும் கலியின்

அழுக்குக் குவியலையொத்த கறுத்த நிறமுடைய காலனுக்கு இறைவனாகிய பரமசிவனுடைய அனுக்கிரகமடைந்து இடையூறுகளின்றி வாழும் ஜனக்கூட்டங்களோடு கூடியதும் பரமசிவனுடைய வாகனமாகிய விருஷபத்தின் கழுத்திற் பூட்டியுள்ள மணிகளின் ஒலியால் திக்குகளைச் செவிடுபடும்படி செய்வதும் சம்ஸாரபயத்தை யொழிக்கக் காரணமாக விருப்பதும் நான்கு பக்கங்களிலும் தேவர்கள் மானிடர்கள் கின்னரர்கள் இவர்கள் சிவலிங்கங்களை ஆராதிக்கும்போது சிவ சிவ வெனக்கூறும் ஒலியுடன் கூடியதும் தவமுனிவர்களிருந்து சேவிக்கும் அழகுடன் கூடியதுமான காசியைக்கண்டான். அங்கு கிளிகள் குயில்கள் முதலிய பறவைகளிருந்து கலகலவென்றொலிப்பதும் புஷ்பங்கள் நிறைந்து தலை வணங்கி நிற்கும் கிளைகளுடன் கூடியதுமான பலா, மா கதம்பம் முதலிப் மரங்கள் நிறைந்த சோலைகளிருந்தன.

பிராம்மண சிரேஷ்டர்களே! காசியின் மகிமையைப்பாருங்கள் ஆச்சரியம்! காசியைக் கண்டவுடன் பூரிதியும்னனுடைய வஸ்திரம் சரத்காலசந்திரனைப்போல் மாறிவிட்டது. இங்ஙனம் தன் உடைமாறியதும், அரசன் தன்பாபம் ஒழியுமென்பதில் நம்பிக்கை கொண்டு ஈசனைத் தியானித்தான். அவன் பாபங்களொழியப் பெற்றுதேவசிரேஷ்டனாகிய ஈசனை விதிப்படி ஆராதித்துக்கொண்டு அங்கு வாசஞ்செய்தான். கடைசியில், பரமசிவன் அவனுக்கு மகாவாக்கியோபதேசம் செய்தார். பிறகு அவன் பிர்ம்மசொரூபம் பெற்று ஏகத்வத்தை யடைந்தான்.

அந்தணர்களே! இன்னும் அநேக பெரியவர்கள் காசியில் வாசஞ்செய்து முத்தியையடைந் திருக்கிறார்கள். காசியில் பிராணத்தியாகம் செய்தவன் சம்சாரத்தை ஒழித்தவனாவான். பாபங்களைச் செய்தவனாயினும் முன் செய்த புண்ணியவசத்தால் காசியையடையின் ஒருக்காலும் நரகத்தையடையான். அறநெறிநின்றாரைப் பற்றிக் கேட்க வேண்டுமா? பூவுலகில் நீசிலோ

அந்தரிக்ஷத்திலோ மற்றெந்தவிடத்திலோ மரணமடைந்தவன் காசியின் மகிமையைத்தெரிந்து கொள்வானுயின் பிரம்ம சொரூப மடைவான். காசி யென்ற இந்த இரண்டெழுத்தை நினைத்துப் பிராணனை விடுவானுகில் அவன் மரித்தவிடம் எது வாயினும் கைலாயமடைவான்.

இதைப்பற்றிப் பெரியோர்கள் கூறியுள்ள ஓர் இதிகாசத்தைக் கூறுகிறேன் கேளுங்கள். முந்திக்-குரு க்ஷேத்திரத்தில் பாலுகி யென்பவரின் புத்திரனுகிய கிருசன் என்பவன் பிங்காக்ஷருடைய ஆச்சிரமத்தில் விளையாடிக்கொண்டு அதருமத்தில் விருப்பங் கொண்டவனு யிருந்தான். பிங்காக்ஷர் என்பவர் கிருசனுக்கு அங்கத்துடன் வேதாத்தியயனம் செய்வித்தார். அவரிடம் குலதருமந் தெரியாத கிருசனுக்கு விசுவாச முண்டாகவில்லை. பாலுகி பிங்காக்ஷனிருவரும் கிருசனுக்குத் தருமங்களையும் வேதபுராணங்களையும் நீதியையும் எப்போதும் போதித்து வந்தார்கள். அவர்கள் இங்ஙனம் உபதேசித்தும் குற்றமுள்ள மனமுடையவ னுகையால், அறநெறியில் மனதைச் செலுத்தினுனில்லை. அவன் யௌவனப்பருவ மடைந்ததும், தன்சிறியதாயா (பிங்காக்ஷனுடைய பத்தினி) ராகிய சன்னீதி என்பவளையும் குருபத்தினியாகிய ஹைமவதி யென்பவளையும் தன் வசப்படுத்திக்கொண்டு மதுராபுரிக்குச்சென்று அங்கு அவர்களோடு சுகமனுபவித்துக்கொண்டிருந்தான். அன்றியும் அரசர்களுடைய திரவியங்களைத் திருடிமதுபானம் செய்தலாதிபாபங்களைப்புரிந்துவந்தான். இப்படியாகப்பனிரண்டுவருடங்கடந்தது. பிறகு குருபத்தினியும் மற்றவர்களும் க்ரமமாக மரணமடைந்தனர். கிருசன் அதனுல் மிகவும் துக்கமடைந்து கலிங்கதேசஞ்சென்று பலவிடங்களிலும் மனம்போனபடி திரிந்தான். அப்பொழுது இவனுக்குக் கடுமையான நோயுண்டாய்ச் சகித்தற்கரிய துன்பமுற்றுன். இச்சமயம் இவனுக்கு இவன் செய்த பாபங்கள்யாவும் நினைவுக்கு வந்து இவனை வருத்தின. அதனுல் அவன் இனி நமக்குப் பரலோகப்

பிராப்தியில்லை யெனத் தீர்மானித்தான். ஆயினும் அவன் முன் னொரு தடவை காசிக்ஷேத்திர மகிமையைச் செவியால் கேட் டிருக்கிறனாதலால் அந்தக் காசி க்ஷேத்திர ஞாபகம் உண்டாய் அந்த இரண்டு அக்ஷரங்களையும் உச்சரித்தான். அப்பொழுது ஆவியும் அவனை விட்டொழிந்தது. குரூரசுபாவமுள்ள யமதூதர் கள் கிருசனைப்பாசக்கயிற்றால்கட்டினார்கள். அச்சமயம் திரிசூலத் தைக் கையிலேந்திய பரமசிவ கணங்கள் இளஞ்சூரியனுக்கு நேரான தேஜஸுடன் கூடிய விமானமீது அநேக ஸ்திரீகள் சாமரம் வீசிவர அங்கு தோன்றினார்கள். அவர்களைக் கண்ட யம கிங்கரர்கள் "சிவகணங்களே! நீங்கள் அறநெறி வழுவாதவர்க ளிடம் அன்புடையவர்கள். இந்தக்கிருசனோ மகாபாபங்களைச் செய்தவன் என்பதை நீங்களும் அறிவீர்கள். அப்படியிருந்தும் நீங்கள் இங்கு எக்காரணம் கொண்டு வந்தீர்கள்" என்றார்கள். இதைக்கேட்டதும் சிவகணங்கள் "தூதர்களே! இந்தக்கிருசன் எப்போதும் கெட்ட நடத்தையுள்ளவனாயினும் இவன் தன் மரணத்தருவாயில் காசி யென்னும் திவ்விய திருநாமோச் சாரணம் செய்தான். ஆகையால் இவன் பாபங்களொழிந்தது. இவன் கைலாயத்தில் ஓர் யுகம் இருக்கப் போகின்றான். பிறகு இவன் காசியம்பதியுற்று அங்கு முத்தியடையப் போகிறான் என்று கூறிக்கிருசனை யமதூதர்களிடமிருந்து மீட்டுக்கொண்டு பரமசிவ சன்னிதானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். யமதூதர் கள் தங்களிறைவனிடம் சென்று நடந்தவைகளைத் தெரிவித்தார் கள். தூதர்கள் கூறியதைக்கேட்டதும் யமன், "பிராணன்வெளிப் படும்போது காசியிலிருக்கும் ஜனங்களுக்கும், காசி என்று உச்சரிக்கிறவர்களுக்கும் விஷ்ணுபக்தி யுள்ளவர்களுக்கும் மஹா தேவபாராயணர்களுக்கும் புண்ணிய தீர்த்தங்களுக்குச் செல்கிற வர்களுக்கும் நான் பிரபுவல்ல, எங்குகண்டாலும் விட்டுவிட வேண்டும்" என்றான்.

செவியில் கேட்டமாத்~~திரத்~~தில் பயங்களைப்போக்கும் காசி யின் மாகாத்மியம் கூறினேன் என்றார் பிருகு மகாமுனிவர்.

## இரண்டாவது அத்தியாயம்.

தம்முடைய வம்சத்தவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் பிருகுமகாரிஷியானவர் மறுபடியும் காசியின் மகிமையை விவரிக்கிறார். ஏ முனிபுங்கவர்களே! காசியின் மகிமையைக்கேட்டவுடன் நீங்கள் முத்தியடைவதில் கொண்டிருக்கும் சந்தேகம் நீங்கும். காசியை அடைவது கிடைக்கக் கூடியதல்ல. காசியில் முத்தியடையப் பெறுவதும் துர்லபம்.. மோக்ஷத்தை யபேக்ஷித்தவர்கள் எப்போதும் காசியிலேயே வசிக்கவேண்டும். உமாகாந்தனாகிய சங்கரன் "இவன் தனக்கு அன்பன். இவன் பிராமணன்" என்பது முதலிய வித்தியாசங்களைக் கருதாமல்கடைசியில் ஏகாத்மசொரூபத்திலிருக்கும் மகாவாக்கியத்தை உபதேசம்செய்கிறார். அங்கு இதற் குரியவன் இவன் என்கிற நியாயமில்லை. அந்த க்ஷேத்திரத்தில் அதருமஞ் செய்தவனுக்கு அதற்குத் தக்கபடி நரகானுபவம் ஏற்படும். பின்னர் நல்ல அறிவுஉண்டாகும். காசியிலிருந்து பாபம் செய்தவன் பிசாசுருவமடைந்து திரியவேண்டும். அவன் செய்யும் ஒவ்வொருபாபத்திற்கும் மூவாயிரம் வருஷம் துன்பமனுபவித்துத் தீரவேண்டும். ஆகையால் காசியில் மனதாலும் பாபத்தை நினைத்தல் கூடாது. இந்த மகாமகிமை வாயந்த வாரணாசி க்ஷேத்திரத்தில் அறநெறி தவறாமல் வாசஞ் செய்து வரும் முனீசுவரர்கள் தங்களுக்கு முன் நூறுகுலத்தையும் பின்நூறுகுலத்தையும் கடைத்தேறச் செய்கிறார்கள். காசியை உத்தேசித்துச் செல்வோருக்கு எப்போதும் நல்லசமயந்தான். வஸ்துக்கள்யாவும் மங்களந்தருவனவாகும். அதைப் பற்றிச் சிறிதும் ஆராயவேண்டிய அவசியமில்லை. ஆனால் காசியாத்திரைக்குப் பிரதிபந்தமாகத தேவர்கள் ஏற்படுவார்கள். ஆயினும் முத்தி நலத்தை அளிக்கும காசியம்பதிக்கு அந்தத் தேவர்களை உபேக்ஷித்தே செல்லவேண்டும். காசியில் முத்தியடைய வேண்டுமென்கிற எண்ணங்கொண்டு எவன் தன்னாலியன்ற முயற்சி

செய்கிறானோ அவன் சிறிதும் வருத்தமின்றி அதி சீக்கிரத்தில் பயனைப் பெறுவான். காசியில் முத்திபெறுவான். காசியில் முத்தி பெறுதல் கூடுமா வெனச் சந்தேகிப்பவர்களுக்கு பிராணன் வெளியேறும் தருணத்தில் சிவபெருமான் கிருபையைக் காட்டுகிறார். பிராமண சிரேஷ்டர்களே! காசியில் செய்ததானம் தவம் இவைகள் அதி சொற்பமே யாயினும் அந்த திவ்யக்ஷேத்திரத்தின் மகிமையால் அளவிறந்த பலனையளிக்கும். தேவநதியாகிய கங்கையும் மணிகர்ணிகாகட்டமும் இருக்குமிடத்தில் முத்திகைகூடுதல் ஆச்சரியமா! அந்த வாரணாசி க்ஷேத்திரத்திற்குச் செல்லும் தீரபுருஷர்கள் அறநெறி ஒழுகுவதில் சிந்தை செலுத்தி வருவார்களாயின், அவர்கள் சரீரம் லயமானவுடன், யாதொரு பயனையுங் கருதாது செய்த தருமங்களால் கிடைக்கக்கூடிய ஆத்ம ஞானங்கைவரப் பெறுவார்கள்.

அந்தணர்களே! அவிமுக்தம் என்னும் பெயர்போன்ற அந்த க்ஷேத்திரத்தை எப்போதும் விடக்கூடாது. இது சத்தியம்! சத்தியம்! சம்சாரம், சாரமற்றது என நிச்சயித்து தேக முடிவு வரையில் அங்கு நம்பிக்கையுடன் வசிக்க வேண்டும். மஹாதேவாகிய பரமசிவன், தாரகமான ஞானத்திற்குக் காரணமானதும், பிர்ம்ம சுவரூபம் ஆத்மா இரண்டும் ஒன்றென்று விளக்கக்கூடியதுமான தத்துவவாக்கியத்தை எப்போதும் கடைசிக் காலத்தில் செவியில் உபதேசிக்கின்றார். அந்தக்காசியை விட்டுவர எவன் தான் விரும்புவான் என்றார்.

முனிவர்கள், பிருகு மஹாமுனிவரே! இப்புவியில் மோக்ஷத்தைக் கொடுக்கும் காசி யிருக்கும் போது சில ரிஷீசுவரர்கள் மோக்ஷத்திற்கு ஸாதனமாகச் சிரவணம் தியானம் மனனம் இவைகளைச் செய்து பாபத்தைப்போக்கிக் கொள்ளுகிறார்களல்லவா? ஏன் அப்படிக் கிலேசப்படவேண்டும்? முனிசிரேஷ்டரே! எங்களுடைய இந்த சந்தேகத்தைப் போக்கவேண்டும் என்றார்கள். பிருகு முனிவர், ரிஷிசிரேஷ்டர்களே! உண்மையைக்

கேளுங்கள். தரும புத்தியுள்ள நீங்கள் இதுவிஷயத்தில் சந்தேகப்படவேண்டாம்.

ஜனங்களுடைய செய்கை விசித்திரம். சிற்சில விஷயத்தில் விருப்பமுள்ளவர்கள் அங்கங்கு சுவதந்தரர்களாகவே தங்களிஷ்டப்படி காரியங்களைச் செய்கிறார்கள். வருணாச்சிரம விதிப்படி செய்யும் காரியங்கள் நித்தியமென்றும் நைமித்திகமென்றும் காமியமென்றும் மூவகைப்படும். அதில் காமியமென்பது தன்னிச்சைப்படி நடத்தும் காரியமாகும். ஏ அந்தணர்களே! அநேக உபாயங்களைக் கொண்டு பெறக்கூடிய பயனிலேதான் உலகம் பிரவிருத்திக்கின்றது. மலரை விரும்பிய ஒருவன் ஒரே கொடி, ஒரே மரம் ஒரே கிராமம் இப்படியிருக்கும்போது ஏதேனும் ஒன்றில் தான் ஆசையை அடைகிறான். அதுபோலவே தங்களிச்சைப்படி முத்திசாதனத்தைத் தரும் மார்க்கத்தில் பிரவேசிக்கிறார்கள். ஒரே வர்ணமுள்ள பசும்பால் ஒரேவர்ணமுள்ள பலபாத்திரங்களிலிருந்தால் ஒரே சமயத்தில் எடுத்தலரிதாய் எதாவது கொஞ்சம் எடுக்கப்படுவதுபோல் மோக்ஷ ஏதுக்கள் அநேகமாயினும் மோக்ஷத்தில் இச்சையுள்ளவர்கள் தங்களுக்கு எது முடித்தல் சாத்தியமெனக் காணப்படுகிறதோ அதனை அனுசரிக்கிறார்கள்.

முனிபுங்கவர்களே! காசியின் மாகாத்மியத்தை மற்றொன்றால் விளக்குகிறேன் கவனியுங்கள். நான் இப்பொழுது உங்களுக்குத் தெரிவிக்கப்போவது வாமதேவர் வசிட்டருக்குகூறியதாகும். ஸரஸ்வதி தீரத்தில் விசித்திரமாகிய ஸ்தானம் ஒன்றிருக்கிறது. அந்த இடத்திற்கு உண்மையுணர்ந்த வாமதேவ முனிவர் எதிர்பாராத விதமாய் வந்து சேர்ந்தார். இங்கு ஏற்கனவே வாசஞ் செய்து வந்த வசிட்டமுனிவர்! வாமதேவமுனிவரைக் கண்டதும் கரைகடந்த ஆனந்தமடைந்து தருமாபிவிருத்தியுண்டாக அவருக்குக்கனி, மூலம், முதலியவைகளளித்து அன்போடு உபசரித்தார். வாமதேவமுனிவரும், அந்த முனிபுங்கவரளித்தவைகளை

அன்போடேற்றுக்கொண்டு அகமகிழ்வுற்றார். பிறகு இருவரும், அந்த திவ்ய தலத்திலே வீற்றிருந்து, வேதவழியை யனுசரித்ததும் அதியற்புதமான பொருள்களமையப்பெற்றதும், அறம் வீடு இவைகளுக்குச் சாதகமானதுமான சரிதையைச் சொல்லிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் நோக்கி மகாஞானியாகிய வசிட்ட மகாமுனிவர் வாமதேவரைவணங்கி முத்திஸாதனமாக விருப்பதைப்பற்றிக் கேட்டார், "அதாவது 'ஆத்தும தத்துவ முணர்ந்த வாமதேவரே! பிரமஞானத்திற்கு முக்கியசாதனம் சாதனசம்பத்தின்றி யிருக்குமாயின், அதை எனக்கு அறிவிக்க வேண்டுகிறேன்" என்றார்.

இவ்வசனம் கேட்ட வாமதேவர் வேதத்தில் கூறியுள்ள சாதனமின்றி பிரமசொரூபத்தின் தத்துவஞானங்கிட்டுமோ? தீபமின்றி ஒளியேற்படுமா? அங்ஙனமாயினும் சொற்பமாகிய இந்த உலகத்தின் கண் ஆதி, நடு, முடிவிலும் விசுவேசுவரரால் சேவிக்கப்பட்ட ஸ்தானமொன்றிருக்கின்றது. அங்கிருக்கும் பிராணிகளுக்குப் பரமசிவன் போகத்தையும் முத்தியையும் அளிக்கின்றார். பாதகர்களாயினும் உபபாதகர்களாயினும் அந்த க்ஷேத்திரத்தின் மகிமையால் பாபங்களொழியப் பெறுகிறார்கள். தீயில் வேறு பொருள்களுக்கு நாசமுண்டாவதுபோல் கில்பிஷம் நாசமடைகிறது. பிரமரிஷியே! இது சம்பந்தமாக இனித் தாங்கள் எதும் விசாரணை செய்ய வேண்டியதில்லை. அற்பனுயினும் தனக்குரித்தான அறநெறி கடைப்பிடித்தொழுகுவானுயின் அவனுக்குக் காசிக்ஷேத்திரத்தின் மகிமையால் உத்தம கதி சித்திக்கும். மிகுதியான புண்ணிய பலனையளிக்கும் பரமசிவனுடைய ஆனந்தகானநத்தை விசுவரூபியாகிய ஈசன் எப்போதும்விடுவதில்லை. அதனால் அவிமுக்தம் எனப் பெயருண்டாயிறறு. காசியில்வசிப்பவர்களுக்குத் தேவர்கள் கருணைபுரிகின்றார்கள். காசி க்ஷேத்திரவாசிகள், மூன்று கண்களையும் நாலு கைகளையும் சிரசில் சந்திரகலையையும் பெறுகிறார்கள். அங்கு செய்யும் ஸ்நானம் தானம் ஜபம் முதலிய சத்கருமங்கள் அளவிறந்த பலனையளிக்கின்றன. இதுபோலவே

அங்கு செய்யும் பாபகருமங்களுக்கும் அளவிறந்ததான பாப பலனுண்டாம். இதிற் சிறிதும் சந்தேகமில்லை. இந்த க்ஷேத்திரத்தில் ஓர் பிராமணனுக்கு வருஷாசனம் கொடுத்து ஸ்னானம் செய்து வரும்படி திட்டப்படுத்தினால் அதனாலேற்படும் புண்ணியபலனைக் கேளும். ஏ முனிசிரேஷ்டர்களே! கங்கையில் எவ்வளவனந்தம் மணல்களிருக்கின்றனவோ அவ்வளவு ஆயிரம் வருடம்வரை பொன்னுலகவேந்தனாகிய இந்திரனுடன் சேர்ந்து சுகத்தையனுபவித்துப் பின்னர் பூவுலகில் மகாராஜனாகப்பிறக்கிறான். களங்கமற்ற குலத்தில ஜனிக்கின்றான். அநேக புத்திரர்களைப் பெறுகின்றான். சுகத்தையும் பரசிவபக்தியையும் பெற்றுக் கடைசியில் காசியம்பதியைச்சேர்ந்து முத்தியைப் பெறுகிறான். அந்த திவ்விய க்ஷேத்திரத்தில் அரசு, பிசுமந்தமரம், கட்டுமாமரம் புஷ்பச்செடிகள் இவைகளைவைத்துப் பயிரிட்டால் இதேபுண்ணியபலன்கிட்டும். தபோதனராகிய வசிட்டமகாமுனிவரே! இந்தப் பூதலத்தில் அநேக புண்ணிய தீர்த்தங்களிருக்கின்றன. ஆயினும் ஜனங்கள் எவ்விதபிரயத்தினத்தின்மூலமாகவாவது காசி க்ஷேத்திரம் போகவேண்டுவது அவசியம். நியாயவழியில் ஈட்டிய பொருளைக் காசி க்ஷேத்திரத்தில் அந்தணர்களுக்குச் சிறிதேனும் கொடுப்பவருக்கு அந்த க்ஷேத்திர வாசியானால் அது அக்ஷய பலனைக்கொடுக்கும். இவ்வளவனந்தம் மகிமையுள்ளது காசி. உமாகாந்தனாகிய பரமசிவனிருந்து பரிபாலித்து வரும் காசி க்ஷேத்திரத்திற்குச்சென்று பார்ப்போமென்றார்.

இங்ஙனம் வாமதேவர் பிரேரணை செய்ததும் வசிட்ட மகாமுனிவர் மனமுவந்து சக்நியின் குமாரனை ஆச்சிரமத்திலிருக்கும்படிசெய்து தாம் காசி க்ஷேத்திரம் போகப் புறப்பட்டார். மகாமகிமை வாய்ந்தவர்களும் தருமத்திற் சிரத்தையுள்ளவர்களும் தபோதனர்களும் ஆசையை முற்றுந் துறந்தவர்களும் எதைச் செய்வதிலும் சிரமமில்லாதவர்களுமாகிய வாமதேவர் வசிஷ்டர் இருவரும் விசுவேசர் சான்னித்தியமாக விளங்கும் வார

ணாசி க்ஷேத்திரத்திற்குச் செல்லும் வழியில் பெரிய ஆரண்யத்தில், குரூர சுபாவமுள்ளவர்களும் ஆயுதத்துடன் கூடியவர்களும் கருவமுள்ளவர்களும் மாலியின் வம்சத்திலுண்டாவர்களுமாகிய நிசாசரர்களைக் கண்டார்கள். அவர்களுக்கு மத்தியில் மாலியின் பௌத்திரனுடைய புத்திரனுகிய ஹாண்டுகன் என்ற அரக்கனைக் கண்டார்கள். குரூரனும் தேவர்களுக்கு இடுக்கண் புரியும் சுபாவமுள்ளவனுமாகிய ஹாண்டுகனும் இவ்விருவரையுங்கண்டான். கண்டதும் நீவிர் யாவரென வினவினுன். அவ்வுரை கேட்டதும் இவ்விரு முனிபுங்கவர்களும் நடுக்கங்கொண்டு தங்கள் பெயரைக் கூறினார்கள். ஹாண்டுகன் வசிஷ்ட முனிவர் என்னும் பெயரை யறிந்துகொண்டு இருவரையும் நோக்கிக் கூறுகிறான்.

ஏ அரக்கர்களே! ஆச்சரியம்! அநேக நாள் சென்றபின்பு என் மனோரதம் நிறைவேறிற்று. இராத்மாவாகிய இந்த வசிட்டனை அவன் தோழனுடன் கொல்லுங்கள். இவனுடைய பௌத்திரனுகிய பராசரமுனியால் இராக்கத சம்ஹாரம் செய்யும் யாகத்தில் எனது தந்தைஉறவினர்களுடன் இறந்தனன் என்ருன்.

இங்ஙனம் ஹாண்டுகன் கூறியதும் வசிட்ட வாமதேவ முனிவர்களை அரக்கர்கள் கட்ட யத்தனித்தார்கள். இவ்விரு மகா முனிவர்களும் அரக்கர்களை எதிர்த்துத் தடுப்பதில் சக்தியுள்ளவர்களாயினும் கோபத்தைத் தியாகம் செய்தவர்களாகையால் ஒருவரை யொருவர் நோக்கியவாறே யிருந்துவிட்டனர். அரக்கர்களால் கட்டுப்பட்ட இவ்விருமுனிவர்களும் இந்திரசித்தின் நாகாஸ்திரத்தால் கட்டுண்ட இரகுபுங்கவர்களாகிய இராமலட்சுமணர்கள் போல் விளங்கினார்கள். அப்பொழுது ஹாண்டுகன் கத்தியை யெடுத்துக்கொண்டு அவரை வெட்டுவதற்கு யத்தனித்தான். அதைக் கண்டதும் வாமதேவமகாமுனிவர் வசிட்ட மகாமுனிவரை நோக்கிக் கூறுகிறார்.

வசிட்ட முனிவரே! பார்த்தீர்களா! நடக்கும் ஆச்சரியத்தை! வாரணாசி க்ஷேத்திரத்தை நோக்கிச்செல்லும் நமக்கு இங்கு ஏற்பட்ட இடையூறுகளைக் கவனிக்கிறீர்களா? மகாகீர்த்தியைப் பெறுவதில தேவர்களும் தடைசெய்கின்றனர். இந்த ஹுண்டுகன் என்ற அரக்கன் பிராணனை யிழக்கும்படி செய்வானேயென்பதிற் சிறிதும் துக்கமுண்டாகவில்லை. பரமேசருடைய பதியாகிய வாரணாசி க்ஷேத்திரத்திரத்தைக் கண்ணாற்கூடத் தரிசிக்கவில்லையே என்று மட்டும் மனம் வருந்துகின்றது. அந்தணர்களுக்குள் சிறந்த வசிட்ட மகாமுனிவரே! காசிக்குச் செல்லவேண்டும். அகிலபுவன கர்த்தாவாகிய சிவபெருமானது சரணகமலங்களைத் தரிசிக்கவேண்டுமென்கிற எண்ணம் நம்மிருவருக்கு மிருந்தது. அந்த எண்ணம் சித்தியாகாமற்போயிற்றே என்று வருந்தினான்.

முனீசுவரர்களே! இவ்விதம் வாமதேவர் என்ற பிரம்மரிஷி கூறிவிட்டுப் பூமியில் நின்றவாறே சங்கரனை மனதில் தியானம் செய்தார். மகாபாபியாகிய ஹுண்டுகன் என்ற இராக்கதன் அவ்விரு முனிவருடைய சடையையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு கத்தியை ஓங்கினான். அச்சமயம் திரிபுராந்தகனாகிய அரன் அங்குத்தோன்றி, பிரளயகாலாக்கினிபோல் ஜ்வலிக்கும்கண்ணைத்திறந்துகோபத்துடன் பார்த்தான். அந்தக்கணமே ஹுண்டுகன் என்னும் இராக்கதனும் அவனைச்சேர்ந்த மற்றவர்களும் சாம்பலாயினர். பின் ஈசன் அவ்விருமுனிவர்களைப் பிணித்திருந்தகயிற்றையவிழ்த்து விடுவித்து அந்தர்த்தானமாயினார். பிறகு முனிவரிருவரும் தங்களுக்கேற்பட்ட பிரதிபந்தம் நீங்கியதற்கு ஆச்சரியமடைந்து பரமகருணாநிதியின் பாதமலர்பணிந்து அங்கிருந்து புறப்பட்டு வெகுநாள் நடந்து காசியை அடைந்தார்கள்.

அந்தக் காசிக்ஷேத்திரத்தின்கண் சண்பகம் இருவாக்ஷி பாதிரி கோங்கு, மல்லிகை, முல்லை முதலிய மலர்களிலுள்ள மதுவையுண்டுகளித்து ரீங்காரம் செய்துகொண்டிருக்கும் வண்டுக்கூட்

டங்கணிறைந்ததும் மிகவும் உருசியான கனிகள் நிறைந்த கட்டுமாமரங்கள், தென்னை, பலாமுதலிய பலவகை மரங்கள் மலிந்துமான அழகிய சோலைகள் பலபலவிடங்களிலு மிருக்கக்கண்டார்கள். குயில், நாகணவாய், கிளி முதலிய பறவையினம் காதுக்கினிமையாகக் கூவுவதையும் கேட்டார்கள். பயத்தால் திசையை நோக்கிக் கண்களைச்செலுத்திக்கொண்டும், வாயில் யவை என்கிற தானியப் பயிரின் முளையைக் கௌவிக்கொண்டும் தங்களுக்குப் பிறகே வந்துகொண்டிருக்கும் யூதபதிகளுடன் தங்கள் மகிமையை விளக்கிக்கொண்டும் சஞ்சரிக்கிறமிருகங்களின் கூட்டங்களையும் கண்டார்கள். தேவர்கள் கூட்டங் கூட்டமாக வந்து விசுவேசரைப்பூசிப்பதையுஞ்சேவிப்பதையுங்கண்டுமகிழ்ந்தார்கள். பக்தகோடிகள் அடிக்கடி வந்து விசுவேசரை பக்தியுடன் வாசனை மலரெடுத்துப் பூசிக்கும் நேர்மையையும் அவர்கள் சிவ! சிவ! அர! அர!! என்று கூறும் அழகையும் கண்டு ஆனந்தமடைந்தார்கள். வேதத்தில் கருமகாண்ட விதிப்படி தத்தயக்குரிய அனுஷ்டானங்களைச் செய்து மனதைச் சுத்தப் படுத்திக்கொண்டு தேவர்கள் வந்து வணங்கும் பரமகருணாநிதியாகிய சிவபெருமானைச் சேவித்துத் துதிபுரியும் முனிவர் கூட்டங்களையும் கண்டார்கள். கங்காநதியினுடைய அலைகளாகிய கரங்களால் ஆலிங்கனம் செய்யப்படுவதுபோல் காசி க்ஷேத்திரம் விளங்குவதையும் கண்டு மகிழ்ந்தார்கள். கண்டதும் இருவரும் அடியற்ற மரங்கள்போல் தரணிமீது விழுந்து நமஸ்கரித்தார்கள். அத்திவ்யக்ஷேத்திரத்தில் ஓரிடத்தில் ஆச்சிரமம் ஏற்படுத்திக்கொண்டு முப்பதினாயிரம் வருஷம் ஜகதீசனைக்குறித்து அருந்தவம் புரிந்தார்கள். ஜடாமகுடாதாரியும் இமாகாந்தனும் திரிபுராந்தகனுமாகிய பரமசிவன் இவ்விரு முனிபுங்கவர்களுடைய தவத்திற்கு மிரங்கித் தரிசனம் தந்து “புத்திமான்களே! நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கும் கோரிக்கையென்ன? கேளுங்கள். நான் நீங்கள் செய்ததவத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். கேட்பது எதுவாயினும் அளிக்கின்றேன்” என்றனர்.

இவ்வசனங்களிறைவனது திருவாயிலிருந்து வெளிவந்ததும் முனிபுங்கவர்களிருவரும் பரமானந்தமடைந்து பக்தியுடன் பணிந்து, துதிபுரிந்து இறைவனே! கருணாநிதியே! காளகண்டா! உமாபதியே! பாவனாதீதப்பொருளே! எங்களுக்கு வரமருள விருப்பமிருக்குமாயின், உன்னுடைய இந்த திவ்யக்ஷேத்திரத்தில் நாங்களிருந்துவரவும், சலனமில்லாத அறிவையுங்கொடுத்தருள்க; வேறு எதுவும் எங்களுக்கு வேண்டேம்" என்றார்கள்.

இங்ஙனம்முனிவர்கள்கூறிய தம்விசுவேசர்மகிழ்வுற்று, முனிவாகளே! நீவிரிவரும் என்னிடம் மனதை நிலைநிறுத்திக் கொண்டு இங்கேயே யிருங்கள். உங்களைத் தரிசிக்கும் இந்நகர் வாசிகளுடைய பாபங்களைப் போக்க உங்களுக்குச் சக்தியையும் கொடுத்தேன். அன்றியும் உங்களைத் தரிசிக்கும் மற்றவர்கள் அவர்களுடையவிக்கினங்களினின்றும் விடுபடுவார்கள். தங்களுக்குரிய தருமங்களைச்செய்து கொண்டு எப்போதும் என்னிடத்துப் பக்தி செலுத்தும் உத்தமர்களாகவும் விளங்குவார்கள்" என்று பரபிரம்மத்தில் ஐக்கியமாகக் கருதிய அவ்விரு முனிவர்களுக்கும் வரமளித்து முத்திக்ஷேத்திரமாகிய காசியிலேயே அந்தர்த்தானமாயினர். வசிஷ்ட வாமதேவ முனிவருடைய சம்வாதமாகிய இந்த அத்தியாயத்தைச் சிரவணம் செய்தோரும் இடையூறின்றிக்காசியில்வாசஞ்செய்யும் பாக்கியம் பெறுவார்கள் என்றார்.

பிறகு முனிவர்கள் பிருகுமகாமுனிவரைப் பார்த்து, உலககாரணனாகிய காலகண்டன் மாந்தர்கள் தத்தமக்குரிய தருமங்களைசெய்துவரவேண்டுமெனக்கூறியதாகத் தெரிவித்தீர்களல்லவா? அதன் உண்மையை விளக்கவேண்டும் என்று வினயத்துடன் கேட்டுக் கொண்டார்கள்.

தருமாத்துமாவாக விருப்பவன் முத்தி யடைவான். பாபியாக விருப்பவன் பிசாசுத்தன்மையைப் பெறுவான் என்றும் நீங்கள் கூறினீர்கள். இதிலும் சந்தேகமிருக்கின்றது. பாபிகள்

முதலில் நரகத்தில் விழுந்துழன்று பின்னர் பிசாசுருவம் பெறுவார்களா அல்லது பிசாசாயிருந்துழன்று பின் நற்கதிபடைவார்களா? இதைப்பற்றி விவரமாகக் கூற வேண்டும். நாங்கள் தங்களையே எல்லாமறிந்த மகாமுனை மதிக்கின்றோம் என்றார்கள்.

பிருகுமுனிவர், முனிவர்களே! ஒரு கணநேரம் பொறுங்கள். உங்களுக்கு மங்களமுண்டாகட்டும். காசியில்செய்தகொடிய பாபத்திற்கு ஏற்படக்கூடிய யாதனையை நான் கேட்டபடி சொல்லுகிறேன். வாரணாசியில் மரணமடைந்தவன் யமலோகத்தில் யமனுடைய ஆக்ஞைக் குட்பட்டு நரகதுன்பத்தை அனுபவிப்பதில்லை. அவனுக்குக் கபாலதாரியும் காலனுக்கு காலனுமாகிய பைரவன் சிக்ஷகனாகிறான். அந்தோ! பைரவர் கொடுக்கும் யாதனை மிகவும் கடுமையானது. காசியில் செய்த பாபத்திற்கேற்படக்கூடிய யாதனை தருமராஜனால் கொடுக்கக்கூடிய தன்று இது சம்பந்தமாய் முன் நடந்த இதிகாசமொன்று கூறுகிறார்கள். அதைக்கேட்பவர்களுக்குக் காசியில பாபஞ்செயய மனந் துணியாது, அஞ்சும்.

முன் காசியில் கிரமேலகன் என்னும் பெயர்கொண்ட சூத்திரன் ஒருவன் இருந்தான். அவன் தரும சிந்தனையுள்ளவன். அந்தணர்களிடம் பக்தியுள்ளவன். தயையுள்ளவன். அருளையில் லாதவன். அதிதிகளிடம் பிரிய முள்ளவன். பொருள்படைத்த புண்ணியசீலன். எப்போதும தருமத்தில் பிரியமுள்ளவன். இவனுடைய மனைவி குழந்தைகளும் அறநெறியிற புத்தியுள்ளவர்களாயிருப்பார்கள்.

இந்த கிரமேலகன் காசியில் திருவாரங்களை அனுசரித்து அந்தந்த தீர்த்தங்களைச் சேவிப்பதும், அந்தந்த லிங்கங்களைப் பூசிப்பது மாயிருந்தான். இவ்விதம் பக்தியுடனிருக்கும் இவனுக்கு அநேகமாயிரம் வருஷமாயும் அறிவு சிறிது மாறுமல் ஒரே நிலையிலிருந்தது. பரிசுத்தமாயிருந்தது. இப்பொழுதொரு

சமயம் வேதங்களை அறிந்த பாகுரி என்ற அந்தணன் ஒருவன் பரமசிவன் நகரமாகிய காசிக்கு வந்து அங்கு வாசஞ்செய்து கொண்டிருந்தான். அந்த பாகுரி ஒரு நாள் வெகு பசியுற்றுக் கிரமேலகன் வீடு வந்து வாசற்படியினின்று, வணக்கத்துடன் அன்னம்வேண்டுமென யாசித்தான். கிரமேலகன் முன் செய்த தீவினையினால் அறிவு குன்றி அந்தணர்களுக்குள் சிறந்த அந்த பாகுரியைத் கண்டதும் வெருட்டினான். மறுபடியும் பாகுரி யாசித்தான். கிரமேலகன் அதன் பின் மிகுந்தகோபங்கொண்டு கையை ஓங்கி அடித்துப் போவென்று துரத்தினான். பாகுரி அடி பட்டு வருத்தமடைந்து பசியுடன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு ஓர் வைசியனைக்கண்டு அவனை யாசித்தான். அவன் அன்போடு உதவியதைப் பெற்று பாகுரி பரம சந்தோஷமடைந்தான்.

பிறகு கிரமேலகன் சிலகாலஞ் சென்ற பின்பு வியாதியை யடைந்து அதனால் மிகத்துன்பமுற்று, ஸ்ரீ காசியில் மணி கர்ணிகையில் பிராணனைத் தியாகஞ்செய்தான். அப்பொழுது கோரமான உருவமுள்ள பைரவருடைய தூதர்கள் மூவர் வந்து கிரமேலகனை பாசக்கயிறுகளால் கட்டி. பைரவர் சந்நிதிக்கு அழைத்துச் சென்றார்கள். கிரமேலகனை பைரவர் கண்டு அதிகக் கோபங்கொண்டு "கணங்களே! இந்த கிரமேலகன் பாபகடத்தை யுள்ளவன், கெட்டகாரியம்செய்தவன், கருவமுள்ளவன். இவனுக் குக் கிரமப்படி நரகதண்டனையை விரைவாக நீங்கள் கொடுங்கள் என்றார். இவ்விதங் கூறியதும், கணங்கள் பைரவர் உத்தரவுப் படியே இந்த கிரமேலகனுக்கு நரகதண்டனையைச் செய்வித்தார் கள். இந்தக்கிரமேலகன் ஆயிரம்வருஷம் மூசையிலடைக்கப்பட்டும் ஆயிரம் வருஷம் குளிர்ந்த நீர் நிறைந்த மடுவில் தள்ளப்பட்டும், துக்கத்தையனுபவித்து, பிறகு நீரில்லாமலும் ஆகாரமில்லாமலும் மெலிந்து, கிருமியாகி வருந்தினான். பின்னர் அந்தக்காசியிலேயே செந்நாயாகப்பிறந்து, முப்பதாயிரமாண்டு கஷ்டத்தை அனுபவித் துப் பின் சங்கர ஜாதியை அடைந்து, ஒவ்வொரு ஜன்மத்துக் கும் முப்பதாயிரமாண்டுக் கணக்காய் கஷ்டத்தை அனுபவித்துப்

பிறகு அந்த வாராணஸியிலேயே சூத்திரனாகப் பிறந்தான். இவனைக் கணங்கள் காலபைரவருக்கு முன் கொண்டுபோய் நிறுத்தினார்கள். காலபைரவர் இவனைப் பார்த்தமாத்திரத்தில், இவன் பிசாசுருவமடைந்து உருத்திரரைச் சேர்ந்த பிசாசுகளுடன் முப்பதாயிரமாண்டு வரையில் பசிதாகத்துடன் துன்பமடைந்தான். பிறகு பரமபதியாகிய சிவபெருமான் இவனது பாபந் தொலைந்து விதிப்படி உபதேசம்பெற அதிகாரியானதை கண்டு தாரகமந்திரத்தை உபதேசம் செய்தார். அந்த உபதேசம் பெற்றதும் கிரமேலகன் பரமானந்த சொரூபமாகிய முத்தியை யடைந்தான்.

அந்தணர்களே! காசியில் பாபஞ்செய்தவர்களுக் கேற்பட்ட கடுமையான யாதனையைப்பற்றின விஷய மெல்லாவற்றையும் தெரிவித்தேன். இன்னும் நீங்கள் கேட்க விரும்பும் விஷயமென்ன வென்று கேட்டார் பிருகு மகாமுனிவர்.

முனிவர்கள், ரிஷிகளுக்குள் சிறந்த பிருகுவே! நீங்கள் சொன்ன விஷயம் பரமாச்சரியமானது. கிரமேலகன் அநேக தேகங்களை யடைந்தா னென்றீர்கள். அதைப்பற்றி எங்கள் மனது சந்தேகிக்கின்றது. மகாபாபம் செய்தவர்களாயினும் காசியில் மரணமடையப் பெறுவார்களாயின், பிறப்பை அடைய மாட்டார்கள் என்று சொல்ல நாங்கள் கேட்டிருக்கிறோம். நீங்கள் இப்போது கூறிய கிரமேலகன் சரிதை அதற்கு விரோதமாக விருக்கிறது. இந்த சந்தேகத்தைப் போக்கவேண்டும். நீர்சகலமு மறிந்தவர் என்பதிலையமில்லை என்று கேட்டார்கள்.

உடனே பிருகுமகாமுனிவர், மகிழ்வுற்று முனிவர்களுக்குள் சிறந்தவர்களே! நீங்கள் இதுவிஷயத்தில் சந்தேகப்படவேண்டாம். காசியில் செய்தது ஸ்தூலபாப மாயினும் உத்கிருஷ்டமான பாபமாயினும், ஞானத்தாலோ அஞ்ஞானத்தாலோ செய்ததாயினும் அதனை அனுபவிக்க பைரவருடைய இச்சையை அனுசரித்தது அநேகவிதமாயினும் ஒன்றையே முக்கியமாகக்

கொண்ட நரகங்களுண்டு. காசியில் முற்கூறியபடி பாபம் செய்த வன் அந்த நரகங்களை யடைகிறான். யமலோகத்தில் தண்டனையை அனுபவிக்க யோனிசம்பந்த மில்லாமல் தேகத்தைப் பெறுவது போல், பைரவர் கொடுக்கும் தண்டனையிலும் இம்மாதிரி யோனி சம் பந்தமில்லாமலே தேகமுண்டாவதுண்டு. ஆகையால் காசியில் பாபத்தைச் செய்யக் கூடாது. செய்தவன் பைரவரால் கொடுக்கப்படும் தண்டனையை யனுபவித்தே தீரவேண்டும். அன்றியும் உருத்திருக்குப் பிசாசாகவிருந்து துக்கத்தை அனுபவித்தே தீரவேண்டும் என்றார் பிருகுமகாமுனிவர்.

இங்ஙனம் கூறக்கேட்டதும் முனிவர்கள், மகாமுனிவரே! ஸ்ரீ காசியில் வசிப்பவர் களுக்கே சீக்கிரத்தில் முத்திகிட்டுமென நினைக்கின்றோம். பாருங்கள்; உலகத்தில் பாபத்தைச் செய்யாதவர்களெவரேனு மிருக்கின்றனரா? இருப்பது மிகவும் அரிதேயாம் என்றார்கள். பிருகுமுனிவர் தருமத்தில் விருப்பமுள்ளவர்களே! நீங்கள் கூறியது உண்மை. பாபம் புரிந்தவன் அதற்குரிய பயனை அனுபவிப்பானாயினும், காசியில்செய்தபாபம் சிறிதாயின், அது கங்கை முதலாய புண்ணியநதிகளில் ஸ்நானம் செய்வதாலும் இலிங்கங்களைப் பூசிப்பதாலும் நீங்கும். அக்ஞானத்தால் செய்த பாபமும் ஞானத்தால் செய்தசொற்பபாபமும், மீண்டும் பாபம் செய்யாதிருந்து விசுவேசரைப் பூசித்தால் பரிகாரமாமென்பதிற் சிறிதும் ஐயமில்லை. உபபாதகங்களும் மகாபாதகங்களும் காலபைரவர் கட்டளைப்படி நரகவாதனையை விளைவிக்கும். காசியில் ஸ்தூலபாபத்தைச் செய்து மற்ற இடங்களில் மரணமடைந்தால் அவன் செய்தபாபம் தொலைய வழியுண்டாகாது.

சூக்ஷ்மபாபம் பரிகாரமாவதற்கு நித்தியயாத்திரை செய்தல் வேண்டும். காலையில் கங்கையில் ஸ்நானம் செய்து பகல் வேளையில், மணிகர்ணிகையில் ஸ்நானம் செய்தல்வேண்டும். பின்னர், விசுவேசுவர லிங்கத்தை பூசித்தல்வேண்டும். பிறகு பவானி, டுண்டிராஜன், தண்டபாணி, பைரவர் இவர்களைத்

தினந்தோறும் பூசித்துவரின் சூக்ஷ்ம பாபபரிகாரம் உண்டாகும்.

பிராமண சிரேஷ்டர்களே; இவ்விதம் யாத்திரைசெய்து கொண்டு தனக்குரிய தருமங்களை அனுஷ்டிப்பவனுக்குச் சீக்கிரத்தில் முத்தியுண்டாம்.

## மூன்றாவது அத்தியாயம்.

முனிவர்கள் மறுபடியும் பிருகு மகாமுனிவரை நோக்கி ஆச்சரியம்! திரிபுராந்தகனாகிய பரமசிவனது பட்டினமாகிய வாரணாசி க்ஷேத்திரம் மிகவும் ரம்மியமானது. கங்காநதியின் தீர்த்தத்திவலைகளால் பரிசுத்தமடைந்து அதிசுந்தரமாக விளங்குகின்றது. தத்தமக்குரிய அறநெறி வழுவாதியற்றும் சாதுக்களுடைய பாபம் அங்கு விளங்கும் இமையமலைச் செல்வியாகிய உமாதேவியாரின் திருவருளால் நாசமடைகிறது. இவ்வளவுமகிமை வாய்ந்தது இந்தவாரணாசி. இதன் மகிமை செவிப்புலனுக்கு அமுதம்போன்றதாயிருக்கிறது. இதை ஒருமுறை கேட்டவர்களுக்கு மறுமுறை கேட்கவேண்டுமென்கிற பேராவாவுண்டாகிறது. ஆகையால் உத்தமமாகிய காசியின் மாகாத்மியத்தை மறுபடியும் கூறவேண்டும் என்றார்கள்.

இப்படிக் கூறியதும் பிருகுமகாமுனிவர் புன்முறுவல்பூத்து முனிவர்களே! நீங்கள் சிரத்தையுடனும் ஸ்திரபுத்தியுடனும் சந்தேகத்தை விட்டுக் காசியின் மாகாத்மியத்தைக் கேளுங்கள் கூறுகின்றேன். இதைப்பற்றிய இதிகாசமொன்று பெரியோர்களால் கூறப்படுகிறது.

முன் காலத்தில் இரதயூதபனுகிய சுபருவா! என்னும் பெயர்கொண்ட மன்னனொருவனிருந்தான். இவன் க்ஷத்திரிய தர்மத்தில் விருப்பமுள்ளவன். பலசாலி. பகைவர்களைமுறியடித்து அவர்களின் நாட்டைக்கைப்பற்றும் வீரன். பனிரண்டு அக்ஷௌஹிணிசேனை இவனுக் குண்டு. இந்த மன்னன் சோம வம்சத்தைச் சார்ந்தவன்.

இந்த சுபருவா ஒருநாள் வேட்டைவிளையாட எண்ணங்கொண்டு வெகு வேகமாகச் செல்லும் குதிரைமீதேறி சொற்ப சைன்னியங்களோடு வனத்தைநோக்கிச்சென்றனன். வனமடைந்ததும் இரத்தத்தையே உணவாகக் கொள்ளும் பாணங்களை வில்லிற்பூட்டி, மான்கள், பன்றிகள், மிருகங்கள், எருமைகள் இவைகளை யடித்து வேட்டை விளையாடித் திரிந்தான். அப்பொழுது அரசன் குதிரைமீதிருந்த வண்ணத்திலேயே வேறொரு வனம் சென்றுவிட்டான். அவனுடைய சைன்னியங்கள் அரசனைக் கொஞ்சதூரம் பின் தொடர்ந்து பார்த்து முடியாமல் நகரம் திரும்பிவிட்டன.

சுபருவாவோ அந்த வனத்தில் நெடுநேரம் வேட்டையாடிக்கொண்டிருந்து ஓர் குளத்தைக்கண்டு அங்கு குதிரையை நிறுத்தினன். மிகவும் தெளிந்த நீரையுடைய அந்தக் குளக்கரையில் அன்றலர்ந்த தாமரைமலரை யொத்த வதனமும், பவளத்தினும் சிறந்த இதழும், ஆம்பலை யொத்தவாயும், முல்லையை யொத்த பல்வரிசையும், அன்னத்தையொத்த நடையும், குயிலைப்பழிக்கும்இனியமொழியும், மதங்கொண்ட வண்டுக்கூட்டங்களின் வரிசைபோவென ஐயுறத்தக்க அளகபந்தியும் இளைத்த வயிறும் சிறுத்த இடையும், காருண்யத்தில் சுழலும் பார்வையும் ஆவரிசையுடன் வெகு சுந்தரமாக விளங்கும் கொங்கைகளுமுடைய ஓர் மாதரசு பல சேடிகளுடன் நிற்கக்கண்டான். கண்டதும் கரைகடந்த ஆச்சரியங்கொண்டான். வனதேவதைபோவென ஐயுற்றனன். பிரமித்தனன். பேசவேண்டுமென்கிற

எண்ணங்கொண்டான். ஆயினும் துணியவில்லை. பின்சற்று நேரம் யோசித்து மனந்துணிந்து "ஏ கல்யாணி! ஏ சுந்தரி! சரத்காலசந்திரனை யொத்த முகமுள்ளவளே! நீ யார்! தேவஸ்திரீயா! கின்னர ஸ்திரீயா! நாகஸ்திரீயா? வனதேவதையா? ஸ்திரீ ரத்தனமே! நான் அதை யறியக்கூடுமாயின் தெரிவிக்க வேண்டுகிறேன்" என்றான்.

இங்ஙனம் வெகு வணக்கத்துடன் கேட்கும் அரசனைச் சந்திரிகை யென்னும் பெயர்கொண்ட அந்த மாதாசி திரும்பிப் பார்த்து, அவனழகில் ஈடுபட்டு மணம்புரிந்து கொள்ளக்கருதி, "ஏ சுந்தர! நான் பகைவர்களைச் சங்கரிக்கும் வல்லமை வாய்ந்த விசாலமகாராஜனது பெண். விவாகமாகாதவள். அழகான வாகுவையுடைய இராஜ சிரேஷ்டனே! நான் தங்களை மணஞ் செய்துகொள்ள விருப்பம் கொண்டேன். என்னைச் சீக்கிரமாக நீர் விவாகம் செய்துகொள்ள வேண்டும்," என வேண்டினள்.

முன்பின் அறியாத ஓர் ஸ்திரீ தன்னைக்கண்டு இங்ஙனம் கூறியதும் சுபருவா மிகவும் வியப்புற்று விசாலமான நிதம்ப முடைய ஏசுந்தரீ! உனக்கு இன்னும் விவாகமாகவில்லை யென்பதைத் தெரிந்து கொண்டேன். உனக்கு என்னை மணந்து கொள்வதில் பிரியமிருக்கின்ற தென்பதையும் இப்பொழுது நீ தெரிவிக்க அறிந்து கொண்டேன். எனக்கும் உன்னைமணஞ் செய்து கொள்வதில் சம்மதமே! ஆயினும் உன்னை உன்தந்தை மனமொப்பித்தந்தாலன்றி மணஞ் செய்து கொள்ளேன். தந்தையிருக்கும் போது கன்னிகைகளுக்கு எவ்வித சுதந்தரமுமில்லை. ஸ்திரீகள் கன்னிகையாயிருக்கும் போது பிதாவிற் கடங்கியும், கல்யாணஞ் செய்து கொண்டபின்னர் கணவனுக்கடங்கியும், மக்களை யீன்று வயோதிகமடைந்த பின்பு தங்கள் பிள்ளைகளுக் கடங்கியுமிருத்தலே கடனென்பர் ஆன்றோர். ஆகையால் உனக்கு இப்பொழுது சுதந்தரங் கிடையாது. உன்னை உன் தந்தை தரும நியாயப்படி விவாகம் செய்து கொடுக்

கட்டும். நான் உன்னை மணஞ் செய்து கொள்கின்றேன். அப்பொழுது தடைசெய்யேன் என்றனன்.

இங்ஙனம் கூறியதும் சந்திரிகை, "எதி! என்தந்தையாகிய விசாலராஜன் க்ஷத்திரியதர்மம் தவறாத உத்தமன். அவர் ஓர் பிரதிக்ஞை செய்து கொண்டிருக்கிறார். அதைக் காப்பாற்றிக் கொள்ளக் கருதித் தங்களுக்கு என்னைத் தரும நியாயப்படி விவாகஞ்செய்து கொடுக்க மாட்டார். இதற்கென்ன செய்வேன். தாங்கள் கிருபை/ செய்யவேண்டும்" என்றிரந்தனள். இதைக் கேட்டசுபருவா, "ஏ சந்திரீ! உன்தந்தை விசாலராஜன் செய்து கொண்ட பிரதிக்ஞையாது? உண்மையைச் சிறிதும் ஒளியாமல் தெரிவி. பிறகு உன் விஷயமாக முயற்சிக்கின்றேன்" என்றான் சந்திரிகை, ஐயனே! உண்மையைக் கூறுகின்றேன் கேட்கவேண்டும்.

வாரணாசியென்கிற ஓர் நகர மிருக்கிறது. அது முத்தியை யளிக்கக் கூடியது. தேவர்களுக்கும் கிடைத்தற்கரிது. அந்நகரம் சச்சிதானந்த சொரூபாகிய பரமசிவனுக் குரியது. அந்த உத்தமமான நகரத்தில் குண்டதான் என்னும் ஓர் மன்னனிருக்கிறான். அவனுக்கு அளவிறந்த சேனைகளும் வானரங்களுமுள்ளன. அவன் தருமகுணசீலன். ஐசுவரியவான். அவன் என்னை மணம் செய்துகொள்ள வெண்ணி என் தந்தை விசாலமகாராஜனிடம் பலதடவை கேட்டான், என் தந்தை எக்காரணங் கொண்டோ அவனுக்கு என்னைக் கொடுக்க இசையவில்லை. அதனால் அவ்வரசன் மிகச்சினங்கொண்டு தன் புரோகிதனை அனுப்பி அவன் மூலமாகப் பலபடியும் திட்டினான். புரோகிதன் வந்து தெரிவித்தது யாதெனில், விசாலமகாராஜனே! எமதர்சனாகிய குண்டதராஜன் பலதடவை உமது பெண்ணாகிய சந்திரிகையை விவாகம் செய்து கொள்ள விரும்பிக்கேட்டும் நீர் இசையாததால், அவர் இப்பொழுது மிகவும் சினங்கொண்டு "அற்பனாகிய விசாலராஜனையும் அவன் உறவினர்களையும் சங்கரித்து அவ

னுடைய பெண் சந்திரிகையை பலாத்காரமாகக் கிரகித்துக் கொள்ளத் தீர்மானித்திருக்கின்றேன். இதை அவனுக்குத் தெரிவி" எனச்சொல்லி என்னைத் தங்களிடம் அனுப்பினர் என்று தெரிவித்தான்.

இங்ஙனம் புரோகிதன் கூறியதைக் கேட்ட என் தந்தை "ஏ புரோகிதரே; நன்றுநன்று!! துஷ்டனுகிய உமதரசன் குண்ட தானுக்குப் பெண்கொடுக்கச் சம்மதமில்லை; என் பெண்ணுக்கு வேறு வரன் கிடைக்காதபட்சத்தில் அவள் விவாகமில்லா மலே யிருக்கட்டும். எவ்வளவு வருடமாயினும் சரி, வேறு யாருக்கேனும் விவாகம் செய்துகொடுப்பேனுகில அவனையும் அவன் பரிவாரங்களையுஞ் சங்கரித்துப் பின் காசிமாநகர்க்கேகி அங்கு என் அருமைமகளுக்குத் திருமணம் முடிப்பேன். இதில் எள்ளளவு பிசகாது. இதனை உங்கள் அரசனிடம் இப்போழுதே சென்று தெரிவித்துவிடும்." எனக்கூறிப் புரோகிதரை யனுப் பினர் "மன்னனே! இக்காரணங்கொண்டு இவ்விருவருக்கும் வெகுநாளாகப் பகையிருந்துகொண்டு வருகிறது. இருவரும் சம மான சைன்னியங்களையுடையவர்கள். சமமான புஜபலமுடை யவர்கள். ஆகைபால் ஒருவருக்கும் அபஜெயம் ஏற்படவில்லை. அடிக்கடி யுத்தமட்டும் நடந்துவருகிறது ஒருவரையொருவர் ஜயித்தார்களென்பதில்லை. இம்மாதிரியாக இருந்து வருகிறது. ஆகையால் நீர் விரும்புகிறபடி என் தந்தை உமக்கு விவாகம் செய்துகொடார். என் ஐயனே! நான்படும் வருத்தத்திற்கிணங்கி எனக்குக் கிருபை புரியவேண்டும்" என்ருள்.

அந்த வனத்தில் இங்ஙனம் சந்திரிகையென்னும் இராஜ கன்னிகை கூறியதைக்கேட்ட அரசன் அவள்கருத்துக்கிணங் காமல் "ஏ சந்திரிகே! நீ என்னுடன் வா; நாமிருவரும் உன் தந்தையிடம் செல்வோம்; அவரைக்கண்டதும் எது செய்யத் தகுமெனப்படுகிறதோ அதைச்செய்து முடிக்கின்றேன்" என்

ருன். சந்திரிகை அதற்கிணங்கினள். உடனே சுபருவா அந்தக் கன்னிகையுடன் புறப்பட்டு விசாலராஜனிடம் வந்தான்.

விசாலதேசமன்னன் சுபருவைக்கண்டதும் விதிப்படி உபசரித்து “மன்ன! இங்கு இச்சமயம் விஜயம்செய்தது யாது காரணங்கருதியோ” என சுபருவா நான் வேட்டை விளையாடிக்கொண்டு வந்தேன். அங்கோர் குளக்கரையில் உம்முடைய பெண்ணுகிய சந்திரிகையைக் கண்டேன். கண்ட நான் அவளை மணஞ்செய்துகொள்ள விருப்பங்கொண்டு இங்கு வந்தேன். விதிப்படி உமதுகன்னிகையைப் பாணிக்கிரகணம் செய்து கொடுங்கள்” என்ருன். விசாலராஜன் “இராஜ சிரேஷ்டனே! இந்தப்பூதலத்தில் உமக்குச்சமமான அரசன் வேறு எவனுமில்லையென்பதை யானறிவேன். இந்தக் கன்னிகையின் காரணமாக யான் செய்துகொண்ட பிரதிக்ஞையொன்றிருக்கிறது. அதுயாதெனில், நான் என் கன்னிகையைக் கொடுக்க மனமில்லாதிருந்தும் என்னைப் பன்முறை கேட்டுத் தொந்தரவு செய்ததுமன்றி என்னுடன் அடிக்கடி யுத்தம் புரிந்துவரும் துஷ்டனும் பாபியுமாகிய குண்டதரனைக்கொன்று பின் என் பெண்ணுக்கு மணவினைமுடிக்கத் தீர்மானித்து விட்டேன். நல்வேளையாய் நீர் வந்து சேர்ந்தீர். உமக்குப் பெண் கொடுப்பதில் எனக்குச் சம்மதந்தான். அவனைக் கொன்றபின் உமக்கு என் பெண்ணைக் காசிக்ஷேத்திரத்தில் கன்னிகாதானம் செய்து கொடுக்கின்றேன். அவனைச் சங்கரிக்க உமது பேருதவி வேண்டும். என்ருன். சுபருவா, பூபதியாகிய விசாலராஜனே! இப்போதுசந்திரிகையை மணஞ்செய்துகொடும். மணவினை முடிந்த அதேக்ஷணத்தில் குண்டதரனைக் கொன்று நமனுலகுக்கு அனுப்பிவிடுகின்றேன் என, விசாலராஜன், “அரசனே! காசிக்ஷேத்திரத்தில் தான் கன்னிகாதானஞ் செய்து கொடுப்பேன். மற்றவிடத்தில் செய்து கொடுக்கமாட்டேன். இது சத்தியமானபேச்சு. இப்பொழுது என்னுடன் வந்தாலுஞ் சரி விவாகம் செய்து கொடுப்பதில் தடையில்லை” என்ருன். சுபருவா! அரசனே! காசியில் கன்னிகாதானம் செய்து கொடுக்க

வேண்டுமென்கிற நியாயமென்ன? அந்த இடம் அவ்வளவு மகிமையுடையதா? அதைப்பற்றி உமக்குத் தெரியுமா? என்று கேட்டான். விசாலராஜன், சுபருவாவே! காசிக்ஷேத்திர மகிமையைச் சொல்ல வேதங்களுக்கு மியலாது. காசியில் செய்யப்படும் தருமம் கணக்கற்ற பலனை யளிக்கும். காசியில் வசிக்கும் பிராமணன் அற்பனாயினும் சிறந்தவனே. அவனை முத்தி என்ற கன்னிகை வரணம் செய்கின்றாள். சம்சாரமென்னும் சாகரத்தின் அலைகள் எங்கு தங்களையணுகப்பாதிக்குமோவெனப்பயந்த சாஸ்திரஞ்ஞர்களாகிய முனிவர்கள், அவிமுத்தம் என்னும் பெயர் கொண்ட அந்தக் காசிக்ஷேத்திரத்தை விட்டுக் கணமும் பிரிவதில்லை. எந்த மானுடன் காசிக்ஷேத்திரத்தில் சரீரம் ஒழியும் வரை வாசம் செய்கின்றானோ அவனை விசுவேசர் ஜீவனுடனிருக்கும் வரையிலும் மரணமடைந்த பின்னும் இரக்ஷிக்கின்றார். ஒருவன் தான் வெகுதூரதேசத்தி லிருந்துகொண்டு காசிபம்பதியில் வாசஞ்செய்த பயனை யடையவேண்டுமெனக் கருதினானாகில், தருமநெறி தவறாத ஓர் அந்தணனுக்கும் அவ்வந்தணனைச்சேர்ந்த குடும்பத்திற்கும் உண்ணவும் உடுக்கவும் கொடுத்து சிரத்தையுடன் எப்போதும் காசியில் வாசஞ்செய்து வரும்படி செய்யவேண்டும். சிரேஷ்டனாகிய அந்தணனைக் காசியில் வாசஞ்செய்து வரும்படி செய்விப்பவனுக்கும் அங்கு விருப்பத்துடன் வசிக்கும் அந்தணனுக்கும் சம்சாரபந்தம் நீங்குகின்றது. ஆகையால் வெகுதூர தேசத்திலிருப்பவன் முத்தியை யுத்தேசித்து, எந்தப் பிரயத்தினம்செய்தேனும் காசியம்பதியில் பிராமணர்களை வசித்து வரும்படி செய்யவேண்டும்.

சுபருவராஜனே! அங்குள்ள மணிகர்ணிகாகட்டத்தில் பக்தியுடன் மூழ்கி ஜகத்பிரபுவும் கருணையங் கடலுமாகிய விசுவேசரைப் பூசித்துத் தரிசனம் ஓர் தடவையேனும் செய்யின் மீண்டும் அவன் கர்ப்பவாசமடையான். அநேககோடி தீர்த்த சங்கமத்துடன் வடமுகமாகப் பிரவகிப்பதும் பாபங்களைப் போக்கிப் புண்ணியங்களை யளிப்பதுமாகிய கங்கையைத்தரிசனம் செய்ய

வேண்டும். காசியில் கங்காநதியானது சிறிதும் மாறாமலிருந்து க்ஷேத்திரத்திற்குச் செழிப்பையும் பிரகாசத்தையும் உண்டு பண்ணுகின்றது. தேவர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள் யாவரும் இந்ததிவ்ய க்ஷேத்திரத்தையடைந்து கங்கையில் ஸ்நானம்செய்து பரிசுத்தர்களாகிப் பரமபதியும் உலககாரணபூதரும் கருணாநிதியுமாகிய விசுவேசரைத்தரிசிக்கின்றார்கள்.

முன் ஒருசமயம் சுவேதகி என்ற இராஜசிரேஷ்டன் தான் செய்ய உத்தேசித்த ஓர் யாகத்தைப்பரமசிவனே வந்து நடத்தி முடிக்கவேண்டுமெனக்கருதி ஆயிரம் வருடம் வரையில் பக்தியுடன் சங்கரனைப்பூசித்து வந்தான். பிறகு பகவானாகிய மகேசுவரன் சந்தோஷமடைந்து, சுவேதகியின் யாகம் நிறைவேறத் துர்வாசமுனிவரையனுப்பினார். அம்முனிவர் சுவேதகியின் யாகத்தை விதிப்படிநடத்திமுடித்தார். சுபருவாவே! வாரணாசிக்ஷேத்திரத்தின் மகிமை இத்தகைய சிறப்புடையது. இதுதான் உலகத்தில் தவத்திற்குரியக்ஷேத்திர[illegible]க்திக்ஷேத்திரமும் இதுதான். ஆகையால் சந்திரிகையைக் காசிக்ஷேத்திரத்தில் தான் தானஞ்செய்வேன். மகாயாகுவே! உமக்குச் சந்திரிகையை விவாகம் செய்துகொள்ள விருப்பமிருக்குமாயின் குண்டதாரனை அவன் குடும்பம் சைன்னியம் இவைகளுடன் ஒழிக்கவேண்டும் என்றான்.

பிராமண சிரேஷ்டர்களே! இவ்விதம் விசாலராஜன் கூறியதும் சுபருவா ஆகா! அப்படியே செய்வோம் எனத் தெரிவித்து, தன் தேசத்திலிருந்து சேனையை வரவழைக்கவும் சேனாபதிகளைத் துரிதப்படுத்தவும் இங்கிருந்து தூதர்களையனுப்பினான். தூதர்கள் வெகுவிரைவாகச் சென்று சுபருவாவின் சேனாபதியாகிய பிரியாசுவனிடம் சங்கதி தெரிவித்தார்கள். உடனே பிரியாசுவன் பனிரண்டு அக்ஷௌகணி சேனைகளை சுபருவ மகாராஜனிடம் அனுப்பினான். அந்தச்சேனையைக் கண்டதும் விசாலமகாராஜன் களிப்படைந்து தானும் தன் சேனைகளையழைத்துக் கொண்டு காசிக்குச் செல்லப்புறப்பட்டான். அங்கு விவாகம் செய்து கொடுக்கச் சந்திரிகையையும் அழைத்துக்கொண்டான்.

இருவரும் புறப்பட்டுக் காசியையடைந்து குண்டதரனை யுத்தத்திற்கழைத்தார்கள். குண்டதரன் இவர்களிலும் குறைவான சேனையை யுடையவனாயினும் யுத்தம் செய்யவிருப்பங் கொண்டவனாதலால் யுத்தத்திற்குத் தயாரானான். சுபருவா விபுவின் நகரமாகிய காசியைத்தாக்கிக் குண்டதரனைக் கொல்ல முயன்றான்.

இங்ஙனம் இருவருக்கும் யுத்தம் நேர்ந்தவுடன் இந்திராதி தேவர்கள் அப்சரஸ்திரீகளுடன் யுத்தவேடிக்கையைக் கண்டு களிக்கக் கருதி ஆகாயத்தில் வந்து குழுமினர். தேவதாசிகளும் வந்து கூடினர். அப்பொழுது தேவராஜனாகிய இந்திரன் காசியின் மகிமையை அறிந்து கொள்ளக்கருதி பிரகஸ்பதி பகவானைப் பார்த்து, "பரமகுருவே! யுத்தத்தில் மரணமடையும் தூதர்களை வரணம் செய்ய அப்ஸரஸ்திரீகள் விமானத்தின் மீது வந்திருக்கின்றனர். நிர்மலமான அறிவையுடைய குருவே! இனி நடக்கப்போகும் விஷயத்தை [illegible]க்குக் கூறவேண்டும்" என்றான். பிரகஸ்பதிபகவான் [illegible] இந்திர! மன்மததாபத்தை விருத்தி செய்யக்கூடியதும் முனீசுவரர்களுக்கும் மோகத்தை யுண்டுபண்ணக்கூடியதும் லீலைசெய்யவிருப்பத்தை யளிக்கக்கூடியதும் மிகவும் மந்தமானதுமான அப்ஸரஸ்திரீகளுடைய பார்வையானது, ஆயுத்தால் பாபமற்றவர்களும் யுத்தவீரர்களும் மகாதேவனுடைய காசியில் மரணமடைந்தவர்களும், சந்திரசேகரனாகிய பரமசிவனுடைய உபதேசத்தின் தத்துவானுபவமுள்ளவர்களுமாகிய இந்தத் தூதர்கள் முன் வீணாய்விடும். பதுமமலரை யொத்தகரங்களில் அமுதத்தையுடையவர்களும் பதுமமலரை யொத்தகண்களுள்ளவர்களும் சொர்ணம் போன்ற அழகான காந்தியுள்ளவர்களுமாகிய இந்த அப்சரஸ்திரீகள் பிரகாசமுள்ள இந்த விமானங்களைச் சூன்னியமாகவே கொண்டு போகப் போகிறார்கள். இந்தத்தூதர்கள் அவர்களுடன் செல்லார்கள். நூறுயாகம் புரிந்த ஏ இந்திர! காளகண்டனுடைய திருநகரமாகிய இந்தக்காசியில் மரணமடைபவர்களும் முக்தியென்னும்

இலட்சுமி கடாட்சமுடையவர்களுமாகிய இந்த யோதர்களுக்கு அழிந்துபோகத்தக்க சுகபோகங்களினால் வருந்தும் மனமுடைய அப்ஸரஸ்திரீகளை யனுபவித்தல் எவ்விதமேற்படும்; பரிசுத்த மான இந்த க்ஷேத்திரத்தில் மரணமடையப்பெறும் பிரமன் முதல் கிருமியீறான பிராணிகளுக்கும் அவர்களுடைய செவியில் அக்ஷரம் என்னும் (அழிவற்றது) தாரகம் என்னும் (சம்சாரத்தை யொழிக்கக்கூடியது) பெயருள்ள உபதேசமொழிகளை உபதேசிக் கின்றார் ஈசன். அவ்வுபதேசம் பெற்றவர்கள் சம்சாரபந்தத்தினின் றும்விடுபடுகிறார்கள். வேறுஇடத்தில் மரணமடைந்தவர்களுக்கு இந்தக்காசி யம்பதியில் சிராத்தம் செய்யின், அவர்கள் கைலா யத்தையடைவார்கள்.

ஏ தேவராஜனே! மகாமகிமை பொருந்தியவரும், மறைகளுக் கெட்டாதவரும் சச்சிதானந்தரூபரும் திரிலோசனருமாகிய ஈசன் உலகசராசரங்களையீன்ற பார்வதி தேவியாருடன் இந்தக் காசியம்பதியில், பிராணிகளுக்கு முத்தியளிப்பதன் பொருட்டு எப்போதும் வசிக்கின்றார். ஆகையால் இந்த க்ஷேத்திரம் மிகவும் சிறந்தது.

ஏ வாசவ! இங்கு யுத்தகளத்தில் உயிரிழக்கும் சூரர்கள் நீ கருதியபடி இந்த அப்ஸரஸ்திரீகளுக்கு விஷயமாக ஆகமாட் டார்கள். இந்திர! பலபடியாகவும் கூறுவதிற் பயன் என்ன? சச்சி தானந்தரூபமும் மாயாவிகாரமற்றதுமான பிரமத்தின் தன்மை யடைந்தவர்களைப்பற்றி நீ எவ்வித சிரமமடைந்தாலும் தெரிந்து கொள்ள முடியாது என்றார்.

ஏ முனிவர்களே! இங்ஙனம் பிரகஸ்பதிபகவான் இந்திர னுக்குக் கூறியதும் தேவராஜன் அப்ஸரஸ்திரீகளின் பிரயத்தினம் வீணெனவே தீர்மானித்தான்.

சைன்னியத்துட னிருக்கும் சுபருவாவுக்கும் குண்டதார னுக்கும் நடந்தயுத்தம் வலுத்து இருதிறத்தாருள்ளும் அநேகர்

உயிரிழக்கவும் கை, கால், முதலிய அங்கவீனர்களாகவும்நேரிட்டு யுத்தபூமிமுழுதும் மாம்சம் இரத்தம் இவைகள் நிறைந்து சேறு யிற்று. தேர்கள் தேருடனும் யானைகள் யானைகளுடனும் குதிரைகள்குதிரைகளுடனும் அமர்புரிந்தன. பலசாலியாகியசுபருவா அதிசீக்கிரத்தில் குண்டதானுடைய சேனையைக் கொன்று பிறகு அவன் அமைச்சர்களையும் மக்கள்களையும் சங்கரித்துக் கடைசியாக அவனையும்ஒழித்தான். அவனுடையசிங்காசனத்தில விசால ராஜனை வீற்றிருக்கச் செய்து சந்திரிகையை உலகம் புகழத்திருமணம் புரிந்தான்.

பிருகுமகாமுனிவர் பின்னுங் கூறுகின்றார். முனிபுங்கவர்களேசிரவணஞ் செய்த மாத்திரத்தில் மகாபாபங்களைப் போக்கும் இந்தக்காசியின் மகிமையை உங்களுக்குக் கூறினேன். வாரணாசியின் மகிமையை விளக்கும் மற்றொரு விஷயம் இப்பொழுது தெரிவிக்கின்றேன். சிரத்தையுடன் கேளுங்கள்.

இது ஜனகராஜனுக்கு யாக்ஞவல்கியமுனிவர் திருவாய் மலர்ந்தருளியது. விதேகவம்சத்திற் பிறந்த ஜனகராஜன் யாக்ஞவல்கிய முனிவரிடம் முத்திசாதனத்தைச் செவ்வனே கேட்டறிந்து, பரிபூரணமான அந்தக்கரணமும் தத்துவஞானானுபமுவம் பெற்று ஜனனமரண மென்கிற சம்சாரமானது முடிவற்ற தென்பதை யுணர்ந்து முத்தி மார்க்கத்தை உபதேசிக்கும் யாக்ஞவல்கிய முனிவரைப் பார்த்து, "ஞானம் கைவரப்பெற்ற மகாமுனிவரே! தத்துவம் அறிந்த மகானுபாவா! பிராணிகள் யாவற்றுக்கும் எதனால மோக்ஷம் கிட்டுமோ அதனைத் தயைகூர்ந்து தெரிவிக்கவேண்டும். பரபிரம்ம சொரூபத்தில் நிஷ்டையை யடைந்ததாங்கள் ஜனனமரணரூபமாகிய சம்சாரம் நசிப்பதற்குத் தெரிவித்த காரணம் முனிவர் யாவர்க்குமே துர்லபம். போகத்தில் அவாவுடையாரும் வெளிவிடயங்களில்மனமுடையவருமான அக்ஞானிகளைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? என்றான்.

யாக்ஞவல்கியர் ஏ இராஜஸிரேஷ்டனே! நல்லகேள்விகேட்டீர். நான் கூறிய முக்திசாதனம் முனிவர்கள் யாவருக்குமே துர்லபந்தான். ராகதுவேஷம் முதலியவைகளால் மாசடைந்த மனமுடையவர்களைப் பற்றிப் பேசவும் போமோ? அரசனே! சாதனசம்பத்தினின்று ஜனனமரணம் நீங்காது. அந்த சாதனம் எது? எந்த இடத்தில் சீக்கிரம் பெறக்கூடுமெனின் கூறுவாம்.

வாரணாசி யென்னும் பெயர்கொண்ட ஓர் நகரமிருக்கின்றது. அந்நகரில் சாதனசம்பத்தும் மரணமடைந்தால் மோக்ஷமுமுண்டாம். அந்த வாரணாசியிலுள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்பவனெவனும் மனம்பரிசுத்தமடைந்து ஜிதேந்திரியனாவான் விதேஹராஜனே! அந்தக்காசியில் பரமசிவன் எப்போதும் சான்னித்திய மடைந்திருக்கின்றார். பருவதராஜ கன்னிகைக்குப் பிராணநாதனாகிய ஈசன் பிராணிகளுக்கு மோக்ஷமளிக்கின்றார். அங்கு விசுவேசரென்னும் பெயர்கொண்ட திவ்யலிங்கமிருக்கின்றது. அந்தலிங்கத்தைத் தரிசனம் செய்பவன் நாஸ்திகனாயினும் தத்துவ ஞானமுண்டாகும். பாபபரிகாரமாகும். அந்த லிங்கத்தைத் தரிசனம் செய்பவர்கள் இராகத்துவேஷங் களுக்கும் காமகுரோதங்களுக்கும் ஈடுபடாது ஞானக்கண்ணை அடைகிறார்கள். கோடி மின்னல்களுக்குச் சமமானதும் கோடி சூரியசந்திரர்கள் போன்றதும் இந்திரியங்களை அதிக்கிரமித்து நிற்பதும் நிர்மலமானதும் மூவுலகமும் வியாபகமாக நிற்பதும் பரமாயும் நிரஞ்சனமாயிருப்பது மாகியலிங்கம் வீட்டையளிக்கக்கூடியது. அந்த லிங்கத்தின் ஒளியால் சூரியன், சந்திரன், அக்கினி நக்ஷத்திரங்கள், கிரகங்கள் யாவும் பிரகாசிக்கின்றன. அந்தலிங்கத்தைச் சூரியன் பிரகாசப்படுத்தான். அமுதம் அதனைக்குளிரச்செய்யாது அக்கினியும் அதைச்சுடாது. மின்னல், கிரகங்கள், நக்ஷத்திரங்கள் இவை எவைகளாலும் அந்தலிங்கத்தைப் பிரகாசப் படுத்தமுடியாது. விசுவேசரென்னும் அந்தலிங்கத்தைத் தரிசனம் செய்தவன் சம்ஸாரபந்தத்தினின்றும் விடுபடுகிறான். காசியில் பிரம சொரூபங்களான லிங்கங்கள் அநேகமிருக்கின்றன. விதேக

ராஜனே அங்கு விசுவேசருக்கு வலப்புறத்தில் சித்ரூபமாகிய ஓர் வாவியிருக்கின்றது. அதில் மூழ்கி நேமநிஷ்டைகளை முடித்துப் பஞ்சாக்கரமோதி ஈசனைத் தியானிக்கின், கேவலமான பிரமசொரூபம் தோன்றும். மந்திரங்களை யறிந்த முனிபுங்கவர்களும் முத்தியை எளிதில் அளிக்கக்கூடிய அந்த வாவியிலும் காசியிலும் மனதைச் செலுத்தினார்களே யல்லது யாகம் செய்வதில் விசேஷமாக முயற்சித்தார்களில்லை.

இதை யறிந்த மரைமலர்க்கிழவன், யாகத்திற்குப் பங்கம் வருமெனக்கருதி அந்தக் காசியிலேயே பரமேசுவாருடைய பிரீதிக்காகப் பத்து அசுவமேத யாகம் புரிந்தனன். பிரமன் புரிந்த யாகங்களில் மகாதேவரும் அசிந்தியரும் ஆதி அந்தமில்லாதவருமாகிய சிவபெருமான் பிரத்தியக்ஷமாகிப் பதுமமலரிலிருந்துண்டான விதியை நோக்கி நீ விரும்பும் வரம் யாதென்று கேட்டார்.

பிரமதேவர், பகவானே! தேவர்கள் யாவரும் யாகத்தினால் கிடைக்கக்கூடிய அவிர்ப்பாகமின்றி வருந்துகிறார்கள். பூமியில், முன்போல் மழையையுண்டாக்குவதில்லை. மழையில்லாமையால் பிராணிகள்யாவும் பசியால் துன்பமடைகின்றன ஸ்ரீகண்டா! பரமேசுவா! இந்தத் தீங்கை நிவர்த்திக்கவேண்டும். ஜனங்கள் யாவரும் தீங்குறாமல் ஓர் நீதியை ஏற்படுத்தவேண்டும். வேதாத்தியயனம் செய்த அந்தணர்கள், யாகமுதலிய நற்கருமங்களிற் சிந்தைசெலுத்தாமல், உமது க்ஷேத்திரமாகிய வாரணாசியில் மோக்ஷமடையக் கருதுகின்றார்கள் என்று கூறிமுறையிட்டனர்.

இங்ஙனம் பிரமதேவர் கேட்டுக் கொண்டபொழுது சகல புவனகர்த்தாவாகிய சங்கரன், உலகத்திற்கு இதஞ்செய்யக்கருதி வெகுநேரம் ஆலோசித்து, பிரஜாபதியாகிய கமலாசனனை நோக்கிக் கூறுகின்றார்.

ஏ வேதாவே! ஞானமார்க்கத்தை யடைந்தபெரியோர்கள் விதிப்படி செய்யவேண்டிய அனுஷ்டானத்தப்பி நடந்தார்களாயி

னும் முக்தியைவிரும்பி எனது க்ஷேத்திரமாகிய காசியையடைந்தால் அவர்களுக்கு நான் பலனையளிப்பதையன்றி வேறு என்ன செய்யக்கூடும்? காசியில் வாசம் செய்யும் வரையில் ரோகம் முதலியன உண்டாகா. இராகம், துவேஷம் லோபம், கார்ப்பண்யம் அச்சம், கோட்சொல்லல், கலகஞ்செய்தல், சஞ்சலத்தன்மை, மனத்திற்குப் பிரமம், விடயங்களால் உண்டாகும் சோகம் இவைகளுண்டாகா. என்னை மறத்தல், விஷ்ணு, தருமதேவதை இவர்களை மறத்தல் முதலியனவும் ஏற்படா. இங்கு வாசம் செய்பவர்கள் யாவரும் எனக்கு வேண்டியவர்களே. என் அன்பர்கள். ஓ பிரமனே! இவர்களை நான் விதியில் எவ்விதமாக மோகப்படுத்துவேன். ஆயினும் நீ வேண்டுகின்றமையாலும் சொர்க்க லோக வாசிகள் துன்புறுகின்றமையாலும் அவர்களுடைய நன்மை கருதி ஏதேனும் இதமாக வொன்றைச்செய்யவேண்டுவதவசியம்.

முன்னொருதடவை நம்மிருவருக்கும்சம்வாதம்நடந்தகாலத்தில், உனது கோபத்தில்மிருத்தியு ஓர்ஸ்திரீரூபமாக உண்டானது தெரியுமல்லவா? அதனை நீ எமிருத்துயுவே! என்றழைத்தாயன்றோ? அப்படி நீ அழைத்ததும் பயந்து அந்த மிருத்தியு நமக்கு முன் நின்று அழுதனளல்லவா? அப்பொழுது மிருத்தியுவின்கண்களினின்றும் பெருகிய நீரை நீ கையிற் கொண்டதும், அக்கண்ணீர்த்துளிகள் உலகிலுள்ளஜனங்களின் ஆயுளை நாசஞ்செய்பவற்பட்டுச் சில வியாதி ரூபமாகவும் சிலஇராகத்துவேஷ ரூபமாகவும்கிளம்பினதும் உன்ஞாபகத்தி லிருக்கின்றதன்றோ? அந்த வியாதிகளே! இப்பொழுதுஜனங்களுக்கு இடையூறுக ஏற்படட்டும். பிராணிகளை சுவதருமத்திலிருந்துவழுவும்படி செய்யட்டும் இந்த இடையூறுகளை நிவர்த்திசெய்து கொண்டு விருத நியமத்துடன் இந்தக் காசியிலிருப்பவர் களுக்கே முத்தியுண்டாம் என்றார்.

இவ்விதம் பிரமதேவனுடைய வேண்டுகோளுக் கிணங்கிப் பிராணிகளைக்காப்பது நிமித்தம் மகேசுவரன் நியாயம் ஏற்படுத்தியதும்முனிவர்கள்யாவருக்கும்ராகம், துவேஷம், அச்சம், துக்கம், பிரமாதம், சோம்பர், அவா, வெகுளி, முதலியவைகள் தத்துவ ஞானத்திற்கு விரோதிகளாக உண்டாயின. உடனே முனிவர் சிலர் வீணானதுக்கத்தையும் பயத்தையும் அடைந்து காசியை வெறுத்து விலகினார்கள். சிலர் வீணான பயத்தையடைந்து காசியை விட்டே ஓடிவிட்டார்கள். சிலர் துரோக காரியங்களையும் துணிந்து செய்தார்கள். சிலர் ஒருவர்க்கொருவர் பொறாமையும் மாற்சரியமும் கொண்டு திண்டாடினார்கள். சிலர் கலியின் வறுமையால் புத்திதடுமாறி கண் தலை தெரியாமல் திரிந்து வாடினார்கள். சிலர்,

"கெடுங்கனல் மதுவிடம் குறுகி னுண்டிடிற்
சுடுங்கருத் தழித்திடும் தொலைவு செய்யுமாற்
கடுந்துயர்க்காமமோ கருதி னன்னசெய்
திடும்பினுந் தொடர்ந்துவெந்நிரயத் திட்டிடும்"

என்று துருவாசமகாமுனிவர், முன்னொரு சமயம், தம்மோடு சேர்ந்த முனிவர்களுக்குள் பரசிவகதியை யடைதற்கு உபாய மெதுவென விவாதமுண்டான விடத்துக் காமத்தை ஒழிக்கின் கிட்டுமெனக் கூறப்போந்து காமத்தின் தன்மையை எடுத்துக் காட்டியபடி காமம் கொடிதென்பதையும் கருதாது காமத்தில் மூழ்கி மதியிழந்து திரிந்தார்கள்.

இவ்விதம் வியாகுலமடைந்த யாவரும் ஒன்று சேர்ந்து, "நாம் காசியைச் சீக்கிரத்தில் விட்டுவிடுவோம். இங்கிருந்தால் நமக்கு இடையூறு மிகுதியும் உண்டாகின்றது. முனிசிரேஷ்டர்களே இங்கு முத்தி சுலபமாகக் கிடைக்கக்கூடியதாயினும், இராகம்துவேஷம் முதலியவைகள் நம்மைத் துன்பப்படுத்துகின்றன. இராகதுவேஷம் முதலியவை உண்டானவுடன், பாபம் விருத்தியாகிறது. இந்தக்ஷேத்திரத்தில் செய்த பாபம் கொஞ்சமேயாயி

னும் அதிகமாகின்றது. ஆகையால் உடனே வேறிடம் சென்று அந்தக்கரண சுத்தியுண்டாக விதிப்படி கருமங்களைச் செய்வோம். பிறகு தத்துவஞானம் தோன்றும் எனத் தீர்மானித்துக் காசியை விட்டுப் புறப்பட்டு அநேக தீர்த்தங்களில் ஸ்நானம் செய்துகொண்டு வேறோரிடம் வந்து அங்கு மிகுந்த நியமத்துடன் வாசஞ் செய்து வந்தார்கள்.

ஜனகமகாராஜனே! முத்தியைக் காசியிற்பெறுவது எளிதேயாயினும் அங்கு நேரிடும் இடையூறுகளால் கலங்கிய கருத்துடையவர்களுக்கு ஒழிக்கமுடியாத ஸம்ஸாரபந்தமானது ஒழிவது துர்லபம். பூபதியாகிய ஏ ஜனக! அவிமுக்தம் என்னும் பெயர் கொண்ட இந்த திவ்வியக்ஷேத்திரத்தைப்பற்றியான் சூரியனிடம் தெரிந்துகொண்ட மற்றொரு விஷயங் கூறுகிறேன். சாவதானமாக விருந்து கேள்.

விவஸ்வான் விபாகரர் என்னும் பெயரினையுடைய சூரிய பகவானிடம் வேதாத்தியயனம் செய்யக்கருதி அவரிடம்சென்றிருந்தேன். அப்பொழுது ஒரு சமயம் சந்திரனை நிகர்த்த காந்தியை யுடையவரும் பிரமதேவரின் புத்திரருமாகிய நாரத மகாமுனிவர் வீணாகானம் செய்துகொண்டு அங்குவந்தார். சூரியபகவான் அவரைக்கண்டதும் வதிப்படி உபசரித்து "முனிவரே. எங்கிருந்து வருகின்றீர். என்னால் உமக்கு ஆகவேண்டியதென்னவென்று கேட்டார். தேவரிஷயாகிய நாரதமகாமுனிவர் தினகரனாகிய சூரியனைநோக்கிக் கூறுகிறார்.

உலகங்களைப் பரிபாலிக்கும் ஆதித்த பகவானே! உம்மிடம் ஒருமுக்கியமான விஷயங்கேட்கவந்திருக்கின்றேன். ஏ பாஸ்கரா நீர் எங்கும் நிறைந்திருப்பவராதலால், இது விஷயத்தில் நிச்சயம் செய்து உண்மையைக் கூறவேண்டும்.

மகாகீர்த்தி வாய்ந்தவனாகிய மருத்தன் என்னும் அரசன் செய்யும் அசுவமேத யாகத்திற்கு வந்து கூடிய வசிட்டர்

முதலிய பிரமரிஷிகள் மனத்திற்கு இன்பமுண்டுபண்ணும் அநேக கதைகளைப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது மோக்ஷ சாதனத்தைப்பற்றியுங்கதை நடந்தது. அதில்பரமசிவன் க்ஷேத்திரமாகிய காசியைமுக்கியமாகக் குறித்துப்பேசிக் கொண்டாடினார்கள். இதெப்படி என்கிற சந்தேக முண்டாயிற்று. பானுவே! எனக்கனுக்கிரகம் செய்ய விருப்பமிருக்குமாகில் இந்தச் சந்தேகத்தைப் போக்கடிக்க வேண்டுகிறேன் என்றார்.

பானுவானவர், ஏ தேவரிஷியே! நீ சந்தேகமடைய வேண்டாம். எப்போதாவது எந்தவிஷயத்திலாவது சம்சயம் உடைய மனமுடையவன், உலக மிரண்டுங்கெட்டு நாசமடைவான். நாரத! அநேக தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தல், க்ஷேத்திர யாத்திரை செய்தல்! விஷ்ணுவிடம் பக்திசெலுத்தல் இவைகள் அந்தக்கரணசுத்தியையுண்டுபண்ணும். இதிற்சிறிது மையமில்லை. ஏ தேவரிஷியே! காசியும் அவ்விதந்தான். அங்கு ஏற்படும் தாரக மந்திர உபதேச மகிமையால் பிர்மத்தினிடம் ஐக்கியமாகும் தன்மை இன்னமும் பிரகாசிக்கின்றது. மற்றவிடங்களில் ஒருவனுக்குத் தான் செய்த தருமமே பிர்மைக்கியத்தையுண்டாக்கும். இங்கு அப்படியல்ல; காசியே உதவி செய்கிறது. பரம்பொருளைக் காட்டுகின்றது. இந்தக் காசியில் செய்த தருமம் குறைவாயிருந்தாலும் அதிகமா யிருந்தாலும் அது சரியான பலனையே கொடுக்கும். அநித்தியமாகிய சுகத்திற்குப்பகைவர்களும், பாபத்திற்குப் பயந்தவர்களுமாகிய சுகிருத்துக்களின் தருமம் குறைவுள்ள தாயினும் இங்கு பூர்த்தியாய்விடும். இந்த விசேஷத்தைக் கொண்டு தத்துவ ஞானமுடைய பெரியோர்கள் காசியம்பதியைக் கொண்டாடுகிறார்கள். மோக்ஷமடைய வாரணாசி, விஷ்ணுவின் பக்தி இவ்விரண்டுந்தான் முக்கியமானவை. மனை, பொருள் இவ்விரண்டையும் வெறுத்தவர்களில் இந்த விஷ்ணுபக்தி செய்பவர்கள் சிலரேயுள்ளார். பொருளில் அவாவுடையார்க்கு விஷ்ணு எவ்விதம் பிரியமுடையவராவார்? விஷ்ணுவின் விஷயமாகப் பொருளைச்செலவிட்டுப் பக்திசெய்வது மிகவும் துர்லபம்.

காசியென்பது திரியக் ஜந்துக்களுக்கும் சாதாரணமாக ஏற்பட்டது. இராகத் துவேஷங்களால் வியாகூலமுற்ற மனமுடையவர்களுக்கும் பிறர்க்குத் துரோகஞ் செய்ய எண்ணமுடையவர்களுக்கும் காசி யென்பது முத்திக்குரியதாகாது. காசியில் செய்த பாபத்திற்கு அதிபயங்கரமான நரகதுன்பமுண்டாம் என்று, சூரியபகவான் நாரத மகாமுனிவருக்குத் திருவாய் மலர்ந்தருளினர். ஆகையால் பிராணிகள் சாதாரணமாக மோக்ஷமடையும் மார்க்கத்தை நீர் விரும்பியபடி நான் கூறினேன் என்றார் யாக்ஞவல்கியர்.

முனி சிரேஷ்டர்களே! காசி யென்பது இவ்வளவு மகிமையையுடையது. சிரமமன்றி மோக்ஷத்தைக்கொடுக்கக்கூடியது. இன்னும் நான் உங்களுக்குக் கூறவேண்டிய தென்ன? கூறுங்கள் என்றார் பிருகு முனிவர்.

## நான்காவது அத்தியாயம்.

தருமங்களெல்லாவற்றையும் அறிந்தவரும் மகானுபாவனுமாகிய பிருகுமகாமுனிவரே! உமது முகமாகிய சந்திரனிடமிருந்துண்டான அமுதரசத்தை இடைவிடாமல் பானம் செய்தும் நாங்கள் திருப்தியடையவில்லை. இன்னும் காசியின் மகிமையை விவரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர் முனிவர்கள்.

இவ்விதம் அந்த அந்தணர்கள் வினயத்துடன் கூறியதும், தமது வம்சத்தவர்களைச் சந்தோஷப்படுத்தும் அந்த பிருகு மகாமுனிவர் அவிமுக்தம் என்னும் பெயர்கொண்டதும் ஏகநாயகனாகிய திரிபுராந்தகனுக்குச்சொந்தமானதுமாகிய காசியம்பதியின் மகிமையை மீண்டும் கூறுவாராயினர்.

முனிவர்களே! சம்சாரபந்தத்தை யொழித்த மகான்களால் விரும்பப்படுவதும் பாலனுக்காகப் பரிந்து காலனைக்காலாலுதைத்த பரமசிவனுடையதும் கங்காநதியைத்தனக்குச் சிறந்த ஆபரணமாகக் கொண்டதும் சிரவணம் செய்து மனதில் ஸ்மரித்தால் சம்சாரபந்தம் நசிப்பதற்குச் சாதகமான பக்தியைக் கொடுக்கக் கூடியதுமாகிய காசிமாகாத்மியத்தைக் கூறுகிறேன் கேளுங்கள்.

முற்காலத்தில் காசிமாநகரில் சுவதனன் என்னுமோர் அரசனிருந்தான். அவன் பயங்கரமான தேஜஸையுடையவன். அரசர்களுக்குள் சிறந்தவன், பலவான், சத்ருக்களாகிய யானைகளுக்குச் சிங்கம் போன்றவன். மன்னுயிரைத் தன்னுயிராகக் கொண்டு குடிகளிடத்து மிகுந்த அன்புபாராட்டும் கருணையுடையவன். சாதுக்களிடத்தில் பரமபிரீதியுடையவன். இடைவிடாமல் சிவபெருமானையும் அவனது அடியார்களையும் ஆராதித்து வருவான் பொய் சொல்லவறியாதபுண்ணியன். மானத்தையேபிராணனிலும் மேலாகக் கொண்டவன்.

இவ்வரசன், வேதத்தில் கூறியுள்ள நியமங்களைத் தவறாமல் அனுஷ்டித்து வரும் அந்தணர்களைக்கொண்டு நடத்தப்படவேண்டியதும் மிகுதியான பொருளை தக்ஷிணையாகக் கொடுக்கும் அவசியத்தை முன்னிட்டதும் விதிகளில் விசுவஜித் என்று சொல்லப்படுவதுமாகிய ஓர் மகா யாகத்தைச்செய்ய யத்தனித்தான்.

முனிவர்களே! முனிவர்களாகிய ஆம்பல் வனத்திற்குச் சந்திரன் போன்றவரும் நான்குவேதங்களையுந் தந்தருளியபுண்டரீகனுக்குப் புத்திரனுமாகிய சனத்குமாரர் அந்தயாகத்தைப் பார்ப்பதன்பொருட்டு அங்கு விஜயஞ்செய்தார்.

அந்தப் புண்ணியசீலரைக் கண்டதும் சுவதனமகாராஜன் "ஐயனேபோற்றி! ஆநந்த உருவேபோற்றி! மெய்யனேபோற்றி விளங்குமாதவமேபோற்றி! என்று துதித்துத் தரையில்விழுந்து

பணிந்து சிரமேற் கைகூப்பி நின்று தபோதனரே! தாங்கள் இங்கெழுந்தருளியதால் நான் செய்ய யத்தனித்த இந்தமகாயாகம் மிகவும் மேன்மையுடைத் தாயிற்று. மற்ற அரசர்களுக்கு இந்தபாக்கியம் வாய்ப்பதரிது. பிரம்ம சொரூபராகிய தங்கள் வரவைஎன்னென்று புகழ்வேன். தேவராஜனுக்குச் சமமாகவிருக்கும் தன்மையை யடைந்தவனுமானேன். ஐய்னே! தாங்களே! ஜனங்களுடைய அந்தராத்மாவாகவிருந்து ஜனங்களெல்லோருடைய மனோரதங்களையும் நிறைவேற்றுகிறவராகிறீர். பிரம்மத்திற்கும் ஆத்ம சொரூபத்திற்குமுள்ள ஐக்கியத்தன்மையைப் பெற்றவர் நீரே. பரமபதியே! இங்குவந்ததன்நோக்கம்யாது? தெரிவிக்க வேண்டும்'' என்று வினயத்துடன் வினவினன்.

பிர்மதேவரின் புத்திரனுகிய சனத்குமாரமுனிவர் இவ்வரசன்கூறியதைக்கேட்டு மனமகிழ்ச்சியடைந்து அன்புடன் அவனைப் பார்த்து மகாபாக்கியம் செய்த அரசனே! இந்திரனுக்குச்சமமான பதவியை யளிக்கும் இந்த யாகத்தைப் பார்க்கும் பொருட்டு இங்குவந்தேன். ஆச்சரியம்! ஆச்சரியம்!! மகாமோகத்தின் மகிமை மானிடர்களால் அதிக்கிரமிக்கக்கூடாதது. ஓசுவதனமகாராஜனே! நீபரமசிவன் சான்னித்தியமாகவிருக்கும் இந்தக்காசிக்ஷேத்திரத்திலிருந்தும்சொர்க்கவாழ்வை விரும்புகிறாயே; ஓ அரசனே! இந்திரனுக்குச்சமமான நிலைமையைப் பெறுவதால் உண்டாகும் பயனென்ன? இந்தவிசுவஜித் யாகத்தை முடித்து இந்தக் காசிக்ஷேத்திரத்தில் பரமசிவனுக்கு அர்ப்பணம் செய். மன்னுயிரைத்தன்னுயிராகக்கருதும் ஓ சுவதன! நீ யான்கூறியவண்ணம் செய்யாவிட்டால் நீ செய்வதெல்லாம் கடைசியில் வீணாகமுடியும். இந்தக் காசிக்ஷேத்திரத்தில் செய்யும் புண்ணிய கர்மங்களனைத்தையும் ஸ்ரீ நீலகண்டனுக்கு அர்ப்பணஞ் செய்வதுதான் சிறப்பானது. அதுதான் மனதுக்குச் சுத்தத்தைத்தருவது. தத்துவஞானத்தைக் கொடுக்கக் கூடியது'' என்றார்.

இந்த அமுதத் திருவாக்கைக் கேட்ட சுவதனமகாராஜன் இறைவனே! நான் எந்தஜன்மத்தில் செய்தபுண்ணியமோ தங்களை

இச்சமயம் இங்குகொண்டுவந்துசேர்த்தது. எனக்குச்சமயசஞ்சீவியாக வெழுந்தருளினீர். பிராமணோத்தமரே! இன்னும் நான் செய்யவேண்டியதையும் தெரிவிக்கவேண்டுகிறேன்.

சனத்குமாரர் கூறுகிறார்.

ஓசுவதனமகாராஜனே! உனக்கு இதமானதையே கூறுகின்றேன்கேள். சிறந்த க்ஷேத்திரமாகிய இந்தக்காசியில் விகிதமான காரியங்களைச் செய்து இமயமலைச்செல்வியின் பிராணேசராகிய பரமசிவனுக்கு எப்பொழுதும் அர்ப்பணம் செய்யவேண்டும். பரமசிவனது புரியாகிய காசியின் மகிமை பாபங்களைப்போக்கக் கூடியது. உனக்கு முந்தி இதன்மகிமை தெரியாதென்றே கருதுகிறேன். உன்னுடைய நன்மையின் பொருட்டே கூறுகிறேன் இதைக்கேட்டபின் நீ அழிந்துபோகக் கூடிய சுகத்தை விரும்பமாட்டாய்.

முன்னொரு காலத்தில் யமுனாநதிக்கரையில் மௌனர் என்னும் பெயருள்ள ஓர் முனிவரிருந்தார். அவர் கௌசிகவம்சத்திற்குச் சிரோபூஷணமாயிருந்தார். கருணை மிகுந்தவர். தன்னிகரற்றதவமதியுடையவர். அந்த முனிவர்க்கு மாண்டவியர் முத்கலர் என்னும் பெயருடைய இரண்டு சீடர்களிருந்தார்கள். இவ்விருமாணாக்கர்களும் குரு சிஸ்ருஷையில் மிகவும் அன்புடையவர். பரிசுத்தவான்கள். வேதாத்தியயனம் செய்வதில் மிகுந்த ஆர்வமுடையவர்கள். குருமொழியைத் தெய்வவாக்காகக் கொண்டு நடப்பவர்கள். இவ்விருவரும் தங்கள் குருவாகிய மௌனரென்கிற மகாரிஷிக்கு வேண்டிய பணிவிடை புரிந்து வேதாத்தியயனம்செய்து வருங்காலத்தில் மகாபலி சக்ரவர்த்தி ஓர் யாகம் புரிந்தான். அந்தயாகத்திற்கு ஹோதாவாக விருக்க

(ஹௌத்திரம் என்கிற காரியம்) மாண்டவியனை அனுப்பினர் மௌனர்.

மகா புத்திசாலியாகிய மௌனமுனிவரால் அனுப்பப்பட்ட மாண்டவியன் யாகத்திற்குச் சென்று, அங்கு வேதவேதாங்கங்களின் கரைகண்ட பலமுனிவர்களிருக்கக்கண்டான். மகாபலி சக்ரவர்த்தி மாண்டவியனைக் கண்டதும் வணங்கி அன்போடுபசரித்து, யாககாரியங்களைப் பார்க்கும்படி கேட்டுக்கொண்டான். ஜிதேந்திரியனாகிய மாண்டவியன் தன்னுடைய குருவின் ஆக்ஞைப்படி யாகத்தில் ஹோதாவாக அமர்ந்து யாகத்தை விதிப்படி நடத்தினான்.

இப்படியாகம்நடக்கும்போது அசுரராஜனாகியமகாபலிசக்ரவர்த்தி மாண்டவியனை நோக்கி "மாண்டவிய முனிவரே! உமது குருவாகிய மௌனரை நான் வருந்தியழைத்தும் அவர் வாராமலிருந்துவிட்டார். அதன் காரணம் நீர் அறிவீராயின் தெரிவிக்க வேண்டுகிறேன், என்றான். மாண்டவியன், "மகாபலி சக்ரவர்த்தியே! இங்கு என் குருவாகிய மௌனமுனிவர் வாராமலிருப்பதற்கு விசேஷமான காரணமொன்றுமில்லை. முத்கலமுனிவருடன் முத்தியையளிக்கும் காசிக்குச்சென்றிருக்கின்றார். பிரபுவே! உம்முடைய திருப்திக்காக என்னைச் சென்றுவரும்படி ஆக்ஞாபித்தார்" என்றான்.

இதைக்கேட்டதும் மகாபலி, மௌனமுனிவர் காசிக்ஷேத்திரத்திற்குச் சென்றது எதன் பொருட்டு? பிர்ம்மசொரூபமறிந்த மகானாகிய அந்த முனிவருக்குப் பெரும்பாலும் காமிய பலனில் விருப்ப மேற்படாதே என்றான். மாண்டவியன்! அசுரராஜனே! இந்தச்சரீர மொழிந்தவுடன் மோக்ஷத்தையளிக்கக் கூடிய பரமபதியின் க்ஷேத்திரமாகிய காசிக்குச் செல்ல யாருக்குத்தான் மனமுண்டாகாது? அந்த வாரணாசி க்ஷேத்திரத்தில் செய்யப்படும் நன்மை தீமை யிரண்டும் அழிவற்றனவாகும், இதைப்பற்றி நீர் விசாரிக்கவேண்டாம். எனது குருவாகிய

மௌனமகாமுனிவர்க்குத் திரவியம் மிகுதியுமுண்டு. அவர் அங்கு தமது சரீரமுள்ளமட்டும் வாசஞ் செய்யத் தீர்மானித்திருக்கிறார். அவருக்கு அங்கு ஒருபாதியும் ஏற்படாது. உமது யாகம் முடிந்ததும் நானும் அந்த திவ்யக்ஷேத்திரம் சென்று பன்னகாபரணனாகிய சிவபெருமானைத் தியானஞ் செய்து கொண்டிருந்து ஆனந்தமடையப் போகிறேன். அன்றியும் சதாகாலமும் எனது குருவின் சிசுருஷை செய்வதிலேயே கண்ணாக விருப்பேன் என்றான்.

இதுகேட்டதும் மகாபலி, முனிவரே! காசி அவ்வளவு சிறப்புடையதா? ஆனால் இந்த யாகம் முடிந்ததும் நானும் உம்முடன் வருகிறேன். இருவரும் போவோமே என்றான்.

### சனத்குமாரர் கூறுகிறார்.

இவ்விதம் அந்த மகாபலிசக்ரவர்த்தி மாண்டவியனிடம் தெரிவித்துவிட்டுசீக்கிரத்தில் யாகத்தையும்முடித்தான். ரித்விக்குகளாக வந்த அந்தணர்களை விதிப்படி பூசித்து அளவிறந்த திரவியத்தைத் தக்ஷிணையாக வழங்கினான். யாவருக்கும் திருப்தியான போஜனம் செய்வித்தான்.

பிறகு மாண்டவியன் அங்கிருந்து புறப்படும்போது மகாபலியும்சிறிது கப்பமெடுத்துக்கொண்டு அவனுடன் புறப்பட்டுக்காசியையும் மௌனமுனிவரையும் பார்க்கவந்தான். இருவரும் அநேக க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு வெகுநாளைக்குப் பிறகு கண்ணைக்கவரும் பிரகாசத்துடன் விளங்குவதும் நினைத்தவுடன் முத்தியையளிக்கக் கூடியதும் கடலிலெழுந்த விடத்தையுண்டு ஆருயிர்காத்த அமலனினிதமர்ந்தருளும் சிறப்பினையுடையதுமாகிய காசியைக் கண்டார்கள். பவளத்தாரையையொத்த சுந்தரமான மத்வீயரேகையுடன் கூடியதும் மரகதத்தையொத்த இலைகளால் வெகுரம்மியமாக விளங்குவதும்முக்தாபலங்களின் கூட்டம்போலும் வச்சிரம்போலுமுள்ள புகிழ்களுடையதுமானகற்

பகவிருக்ஷங் களால் மிகவும் அழகுவாய்ந்ததும் மதநீரின்வாசனை யால் வியாகுலமுள்ளமனமும் மகாகணபதியின் செவிகளை அசக்கு வதில் சாமர்த்தியமும் மதுரமான கண்டமும் மிருதுவான வசன முமுடையவண்டுக் கூட்டங்களிலிருந்து பாடும் வனப்புடன் கூடி யதும் குயில்களின்மனோகரமான சத்தங்கேட்டு அசையும்படியான இலைகளுடன்கூடியதும் கனிந்த இனிமையான கனிவர்க்கங்களைத் தாங்கமாட்டாமல் தலைவணங்கி நிற்கும் கிளைகளுடன் கூடியதும் கிளிகள்முதலிய பல பறவைகளிருந்து கோதிவிளையாடும் தளிர்க ளுடன்கூடியதுமான சோலைகள் பல விருக்கக்கண்டார்கள்.

சந்திரனை யொத்த தாவள்யமான விருஷபத்தின் கழுத்தில் கட்டப்பட்டமணிகளின் சப்தத்தோடு கூடியதும் இரமணீயமான தும் இரத்தினக் கூட்டங்களால் பிரகாசிப்பதும் விருஷபத்தின் நடையை யொத்து சப்திக்கக்கூடிய அநேக சிறியமணிவரிசைகள் நிறைந்ததும் சிந்தாமணிமயமான ஸ்தம்பவரிசைக ளுடையதும் சிறந்த இரத்தினங்களால் அமைக்கப்பட்ட வெளிவாயில்களை யுடையதுமான பரமேசுவரனுடைய ஆ யத்தைக் கண்டுமகிழ்ந் தார்கள்.

பயங்கரமான பைரவருடைய சப்தத்தால் பாபங்கள் அத மாக்கப்படுவதையும் பார்த்தார்கள். மகாபாபிகளுக்குக் கிட்டா ததும், பார்வதிதேவியுடன் சந்திரசேகராகிய சங்கரன் வசித்து வருவதும், தேவர்கள், மானிடர்கள், கின்னரர்கள் முனி வர்கள் இவர்களால் சேவிக்கப்படுவதும், பக்தர்களுடைய இடை யூறுகளை யொழிப்பதுமாகிய காசி க்ஷேத்திரத்தை இவ்விதங் கண் டதும் கரைகடைந்த உவகையுள் ளாழ்ந்து வணங்கிப் பிறகு உள்ளே பிரவேசித்தார்கள்.

இவ்விருவரும் காசிமா நகரத்துள் பிரவேசித்து அநேக லிங் கங்களைத் தரிசித்தும் பூசித்தும் பரிசுத்தமடைந்து கடைசியில் மௌனமுனிவரைக் கண்டார்கள். அவர் திருவடியில் இருவரும்

தங்கள் சிரந்தோய வணங்கி நின்றார்கள். மௌனமுனிவர் மகாபலியை வரவேற்று விதிப்படி செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்தார். மாண்டவியனும் மகாபலியும் மறுபடி முனிவரை வணங்கி சந்தோஷத்துடன் அவர் அருகே வீற்றிருந்தார்கள். முனிவர் அவர்களை நோக்கி யாககாரியங்களைப் பற்றி விசாரித்தார். பிறகு தருமமான தும் வேதசம்மதமானதுமான அநேக விஷயங்களை அசுரராஜனுக்குக் கூறினர். மகாபலி அதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்து இதுதான் உசிதமான சமயமென்பதையுணர்ந்து மௌனமுனிவரைப் பார்த்து முனிவர் பெருமானே! தருமங்களின் கரைகண்டவரே! பிர்மஞானங் கைவரப் பெற்றவரே! தாங்கள் இந்தக் காசிக்ஷேத்திரத்திற் கெழுந்தருளியதன் நோக்கம் யாதோ? அதை நான் அறியலாமெனின் தெரிவிக்க வேண்டுகிறேன் என்றான்.

## மௌன முனிவர் கூறுகிறார்.

மகாபலி சக்ரவர்த்தியே! நல்ல கேள்வி கேட்டீர்; மிகவும் சந்தோஷம். இதை நீர் கேட்டறிய வேண்டியதும் மிகவும் அவசியமானது. நான் முத்தியை விரும்பி இந்தக் காசிக்ஷேத்திரத்திற்கு வந்தேன். மூடனாயினும் சரி அவனும் இந்தக் காசிக்கு சொர்க்கத்தை யடைய விரும்பி வரமாட்டான். இங்கு காளகண்ட திரிநேத்திரதாரியாகிய சிவபெருமான் சான்னித்தியமாகவிளங்குகிறார். அவர் இங்குவந்து தம்மைச்சரணமடைகிறவர்களுக்குத் தாரகத்தையும் முத்திக்குச் சாதனமான மந்திரத்தையும் செவியில்உபதேசம்செய்கிறார். சர்வசங்காரகாலத்தில் ஏகனாகி விருந்து ஆனந்தத்தாண்டவம் புரியும் அநாதிமுதல்வனாகிய விசுவேசர் சான்னித்யமாயிருக்கும் இந்தக்காசியம்பதியையடைதல் முன்செய்த மகாபாபத்தால் வியாகுல முடையவர்

களுக்குக் கிட்டுவதரிது. இந்தக்காசியேயன்றி மற்றவிடங்களில் மரணமடைந்தவர்கள் தங்களுக்குரிய தர்மங்கள்தவருது அநுஷ்டித்திருப்பார்களாயின் வெகுபிரயாசைப்பட்டு தெய்வத்தன்மையையடைவார்கள். மகாபலி சக்ரவர்த்தியே! இந்தக் காசிக்ஷேத்திரத்தில் அப்படியில்லை; இங்குமரணமடைந்தவன் தாழ்ந்த ஜாதியனுயினும் ஒருபோதும் மகாதுக்கமேவடிவான சம்சாரபந்தத்தையடையான். சந்திரசேகரனுடைய நகரமாகிய இந்தக்காசியில் சிறிதும் சந்தேகமின்றி வாசஞ்செய்தல் வேண்டும். சந்தேகமுள்ளவனுக்கு நல்லபதவி கிடைப்பது துர்லபம். மகாபுத்திசாலியாகிய அசுரராஜனே! மோக்ஷத்திற்கு ஏதுவான விதிகள் பலவுண்டு. ஆயினும் துக்கமே உருவாகவிருக்கும் இந்த ஜன்மத்தால் முத்திகிடைப்பது சந்தேகந்தான். அந்த துக்கமுள்ள ஜன்மமுடையவன் இங்கு மரணமடையப் பெறின் இந்தக்காசியின் மகிமையால் முத்தி பெறுவதுண்மை. மற்றவர்களுக்கு இவ்வளவு சுலபமாக முத்தி கிடைக்காது.

தானவசிரேஷ்டனே! இந்தச்சரீரம் பெரும்பாலும் இல்லையென்றொழிந்த பின்பும் துராசையால் ஆத்மாவை துக்கக் கடலாகிய சம்சாரத்தில் அமிழ்த்துகிறார்கள். பண்டிதர்களாக மதிக்கப்படும் மானிடர்கள் தெரிந்தவர்களேயாயினும் தங்கள் காரியங்களில் முயற்சிப்பதில்லை. தங்கள் சம்பந்தமாக உண்டாகும் அனர்த்தங்களையும் தெரிந்துகொள்வதில்லை. மகாபலியே! தங்களுடைய ஆத்மா நற்கதியையடைய வேண்டுமென்று கருதுகிற மானிடர்கள் அநேக முத்திக்ஷேத்திரங்களையும் அநேக தீர்த்தங்களையும் சேவிக்கவேண்டும். ஆகையால் நான் முத்தியைப் பெற விரும்பி பரமாத்மாவாகிய சங்கரனது திருநகரமாகிய இந்தக் காசிக்ஷேத்திரத்தை ஆசிரித்திருக்கிறேன். மிகவும் சிரத்தையுடன் இங்கிருந்து வருகிறேன் என்றார்.

சனத்குமாரர் கூறுகிறார்.

ஏசுவனு! மகாபலிசக்ரவர்த்தி மௌனமுனிவர் கூறியதைக் கேட்டு, மகாபுத்திமானும் பெரியோர்களிடத்து மிகுந்த அன்புடையவனுமாகிய அந்த அசுரராஜன் அந்த மௌனமுனிவருடன் காசியம்பதியில் வாசஞ்செய்ய எண்ணங்கொண்டான். மௌனமுனிவர் அவ்வசுரேசனுடைய உள்ளக்குறிப்பையுணர்ந்து, அவனைப்பார்த்து, பகைவர்களைச் சங்கரிக்கும் சாமர்த்தியசாலியே! உன்னுடைய மனமானது தேவாதி தேவனுகிய விசுவேசருடைய திருநகரமாகிய இந்தக் காசிக்ஷேத்திரத்தில் வசிக்க. விரும்புகிறதென்பதை யறிந்தேன். நான் உனக்கு ஒரு உபதேசம் செய்கின்றேன். அதைத் தெரிந்துகொண்டு இங்கிருந்து வசித்துவர நிச்சயம் செய்துகொள்.

ஏ மகாபலிசக்ரவர்த்தியே! இராகத்துவேஷங்களாதி குற்றமுடையவர்களும் காமக்குரோதங்களால் வியாகுலமான மனமுடையவர்களும் பாபகாரியங்களிலேயே பற்றுதலுடையவர்களுமாகிய ஜனங்கள் பெரும்பாலும் பாபகாரியங்களிலேயே யத்தனிக்கின்றார்கள். அங்ஙனம் பாபம்செய்யும் இயல்பினர் இந்த மகாக்ஷேத்திரத்தில் வாசஞ்செய்வார்களாயின் அவர்கள் செய்யும் பாபம் பதின்மடங்காகப் பெருகும். இந்தக்ஷேத்திரத்தில் செய்யப்படும் பாபத்திற்கு ஏற்படும் நரகயாதனை மிகவும் குரூரமானது. அதை மனதில் நினைக்கவும் ஒண்ணாது. பயங்கரமான நரகத்தில் முப்பதினாயிரம் வருஷம் கடந்துழன்று பின்பு பிசாசஜன்மத்தை அடைவார்கள். பரிசுத்தர்களாக விருப்பவர்கள் இரண்டு மூன்று தினம்வரையில், இந்த வாரணாசியில் வசித்தார்களாயினும் முத்தியின்பமுண்டாம்.

சனத்குமாரர் கூறுகிறார்.

ஓ சுவதனமகாராஜனே! இங்ஙனம் முனிவர் கூறியதும் மகாபலி, சங்கரனது திருநகரமாகிய இந்தக் காசியில் வாசஞ் செய்தல் அசாத்தியமெனக்கருதி, அங்கு இலிங்கத்தை பிரதிஷ்டை செய்து, பூசித்து, தன் தேசத்திற்கு மறுபடியும் வந்து சேர்ந்தான். ஓ மகாராஜனே! ஆகையால், நீஇந்தச் சிறந்தயாகம் செய்து இந்திரனுக்குச் சமமான பதிவியைப் பெறவிரும்பாமல், இந்த யாகபலனை பரபிர்மமாகிய மகாதேவருக்கு அர்ப்பணம் செய்; பிறகு நீ மனச்சுத்தியையடைந்து கிடைத்தற்கரிய முத்தியைப் பெறுவாய், என்றார்.

பிருகுமுனிவர் கூறுகிறார்.

அந்தணர்களே! சனத்குமாரமுனிவர் உபதேசம் செய்தபடி சுவதனராஜன் நடந்து முத்தியையுமடைந்தான். முனிவர்களே! இந்தக் காசிக்ஷேத்திரமகிமையை விளக்கும் இன்னுமொரு இதிகாசமிருக்கின்றது. இந்த இதிகாசம் பாபங்களைப் பரிகரிக்கக் கூடியது, மிகவும் சிறந்தது.

முன்னொரு காலத்தில் இந்தக் காசிக்ஷேத்திரத்தில் திவோதாஸன் என்னும் பெயர்கொண்ட ஓர் மன்னனிருந்தான். இவன் அரசர்களுக்கெல்லாம் ஆபரணம் போன்றவன். சத்தியவாக்குடையவன். தருமங்களின் உண்மையுணர்ந்தவன், நீதி தவறாதவன், தன் புகழெங்கும் பரவ விளங்குபவனாக விருந்தான். பிரஜைகளிடத்துத் தாயையொத்த கருணைகாட்டும் புண்ணியசீலன்.

தருமகுண சீலனாகிய திவோதாசன் என்னும் இவ்வரசனுக்கு அநேக வருஷங்களாக மக்களில்லாக் குறையொன்றிருந்தது. அந்த அரசனுடைய பட்டமகிஷியாகிய தாரையென்னும் மாதரசி தனக்கு ஓர் புத்திரனுண்டாக வேண்டுமென்பது கருதி தேவர்களைப் பூசித்து வந்தாள். விதிப்படி பிராமணர்களையும் பூசித்து திருப்தி செய்வித்தாள்.

காசிக்குச் சமீபத்தில் சப்புபுரமென்கிற ஓர் பட்டணமுண்டு. அங்கே பரசிவகணத்துள் ஒருவராகிய நிகும்பர் என்பவரிருந்தார். அவர், சுப்பிரமண்யக் கடவுளுக்குச் சமமான வீரியமும் தம்மையடைந்தவர்களுக்கு அதிசீக்கிரத்தில் பலனைக்கொடுக்கும் கிருபையுமுடையவராயிருந்தார்.

தபோதனர்களே! பிள்ளையில்லாதவர்கள் நிகும்பரைத் தரிசனம்செய்தால், அதிசீக்கிரத்தில் புத்திசாலியான பிள்ளைகளைப் பெறுவார்கள். நிகும்பருடைய மகிமையறிந்தவளும் பதிவிருதா சிரோமணியுமாகிய தாரை தனதன்புள்ள நாயகனும்பூபதியுமாகிய திவோதாஸனை நோக்கி, "பிராணநாதா! நமக்கு அன்பான ஓர் புத்திரனில்லாமற் போய்விட்டதே. அதற்காக ஏதேனும் தருமத்தைச் செய்யவேண்டியது அவசியமல்லவா? எந்த தர்மத்தைச் செய்தேனும் புத்திரசம்பத்தை யடையவேண்டும். இல்லாவிட்டால் பரலோகங்கிட்டாது. தவிர சந்ததியற்றவனுடையபிதிர்க்கள் நரகமடைவார்களென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இந்த நியாயந் தங்கள் சித்தமறியாததோ" என்று கேட்டாள். இதுகேட்ட திவோதாஸன், "வில்லைநிகர்த்த புருவமுடையமாதரசே! நீ கூறியதுண்மையே. நான் அந்த நியாயம் அறியாதவனல்ல. அறிந்து, அதற்காகவேண்டி முந்தி நான் அநேகவித உபாயங்களை யனுஷ்டித்தேன். ஒன்றிலும் எண்ணம் நிறைவேறவில்லை. முன்செய்த கர்மமே மேலாகநிற்கிறது" என்றான். தாரை "பூபதியே! தாங்கள் கூறியது உண்மைதான். முன் செய்தகர்மந்தான் வலுவுள்ளதாயிருக்கும். ஆயினும் தேவர்கள் முயற்சியைப்

பெரிதாகவெண்ணிப் பலபடியாகவும் முயற்சிக்கிறார்கள். ஆகையால் முன்செய்த கர்மத்தைப் புருஷப்பிரயத்தினத்தில் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். இதோ இந்தக் காசிக்ஷேத்திரத்திற்குக் கூப்பிடு தூரத்திற் கப்பால் அநேக கணங்களுடன் நிகும்பன் என்னும் பெயர்கொண்ட தேவன் இருக்கிறார். அவர் மக்களில்லாதவர்க்கு மக்களைக்கொடுக்கிறார். அவரிடம் சென்று அவரைப் பூசித்து அவரது அனுக்கிரகம் பெற்றுத் தங்களுடைய உத்தரவை விரும்புகிறேன். "நாடோறும் புரோகிதரை யழைத்துக்கொண்டு அவரிடம் சென்று பூசித்துவர உத்தரவாக வேண்டு"மென அரசன் "தாரே! சந்தோஷம்! நிகும்பதேவர் புத்திரசம்பத் துண்டாக அனுக்கிரகஞ் செய்வாராகில், நீ அங்கு புரோகிதருடன் சென்று அவரைப் பயபக்தியுடன் பூசித்து அரசனுக்குரிய புத்திரனுண்டாகும் பாக்கியத்தை யடை" என்றான்.

## பிருகுமுனிவர் கூறுகிறார்

இவ்விதம் அரசன் உத்தரவு கொடுத்ததும் சந்திரனையொத்த முகமலரும், மேகத்தையொத்த அளகபந்தியுமுடைய தாரை மிகவும் மகிழ்ச்சியடைந்து ஓர் சுபதினம்பார்த்து அன்று முதல் அரண்மனைப்புரோகிதரை யழைத்துக்கொண்டுநிகும்பதேவனிடம் சென்று அவரைப்பூசித்து வந்தாள். இவ்வாறு ஒரு வருடம் பூசை புரிந்துவந்தாள். அப்படியும், புத்திரசம்பத்திற்குரிய இலக்ஷணங்கள் ஒன்றும் அவளுக்குண்டாகவில்லை. அதைக்கண்ட அரசன், தாமரைமலரையொத்தநேத்திரமுடையவளும்புத்திரனையபேக்ஷித்தவளுமாகிய தாரையை நோக்கி, "ஏ தாரே! நீ நாடோறும் நிகும்பரைப் பூசிக்கச் சொல்கிறாயே; உன் மனோரதம் நிறைவேறிற்றா" என்று கேட்டான். இதைக் கேட்டதும் தாரை மிக்க விசனமுற்று, "பிராணநாதா! நிகும்பரைப் பூசிக்கத்தொடங்கி

வருடம் ஒன்று முடிவாகப் போகிறது. காரியசித்தியாவதற்கு எதுவும் அடையாளங் காணப்படவில்லை. நமக்குத்தான் இப்படியிருக்கிறது. மற்றவர்களு[illegible]து இந்த நிகும்பதேவன் ஆறுவது மாதத்தில் பலனைக்கொடுக்[illegible]றார். நமக்குமட்டும் வருஷம் ஒன்றாயும் கருணையுண்டாகாதத[illegible]குக் காரணந் தெரியவில்லை. முன் செய்த கர்மந்தான் காரண[illegible]மெ[illegible] கருதுகிறேன்" என்றாள்.

முனிவர்களே! இவ்விதம் தாரை கூறியதும் திவோதாஸ மகாராஜன் மிகுந்த துக்கமடைந்து உலக இயல்பறிந்தவனேயாயினும் கோபங்கொண்டான். உடனே தன்னுடைய படர்களை யழைத்து "நீங்கள் இந்தக்கணம் நிகம்பனுடைய ஆலயத்திற்குச் சென்று அதை ஆயுதங்களால் இடித்து நிர்மூலமாக்குங்கள்" என்று உத்தரவிட்டான். கர்வங்கொண்டவனும் மகாபாபியுமாகிய திவோதாஸனுடைய படர்கள் அவன் உத்தரவுபெற்ற அக்கணமே அநேக ஆயுதங்களுடன் நிகும்பாலயம் சென்று அதை விரைவாக இடித்தார்கள்.

அதனால் நிகும்பதேவன் மிகுந்தகோபங்கொண்டு அன்றிரவே! அரசனுடைய கனவிற்றோன்றி, "ஏ அரசர்களுக்குள் பதரே! துர்புத்தியுள்ளவனே! பாக்கியவீனனே! எனது ஆலயத்தைத்தகர்க்க உத்தரவளித்து நீ சந்தோஷமடைந்தனை யல்லவா? ஆகையால் நீ சீக்கிரம் இவ்விடத்தை விட்டு ஓடக்கடவாய்; கெட்ட புத்தியுள்ளவனே! பகவானது க்ஷேத்திரமாகிய இந்தக்காசியை நீ துவேஷித்தகாரணத்தினால் இந்த க்ஷேத்திரம் ஜனங்களில்லாமலும் பாபமேலிட்டதாயும் காவலில்லாததாயும் ஆயிரம்வருஷம் வரையில் இருக்கக்கடவது. பூமியில் தருமத்தைக்கெடுத்த அரசனே! இந்த விசுவேசுவர க்ஷேத்திரத்தில் உன்னைப்போலொத்த கோபிகள் வசித்தல் தகாது. ஆகையால் எங்களுடைய நகரத்தை விட்டு விலகு" என்றுரைத்து மறைந்தனர்.

திவோதாசன் இவ்விதம் சொப்பனம் கண்டதும் விழித்துக்கொண்டு திடுக்கிட்டு மிகவும் பயந்து ஆ! நாம் என்ன காரியஞ் செய்தோம்! என்ன நேரிடுமோ தெரியவில்லையே யெனப் பெரும்பீதியடைந்தான். பிறகு அன்றுபொழுது விடிந்ததும் தாலஜங்கர்கள், ஹைஹயர்கள் என்னும் சிலவகுப்பினர் ஆயிரக்கணக்காக ஒன்று கூடி திவோதாஸனைக் கொல்லவேண்டுமென்று கருதிக்காசிக்குவந்து முற்றுகைபோட்டார்கள். முற்றுகைபோட்டதை யறிந்த திவோதாஸன் ஏராளமான சேனைகளுடன் அவர்களை எதிர்த்தான். இரத்தவெள்ளம் பெருகும்படியான பெரிய யுத்தம் நடந்தது. ஓ அந்தணர்களே! திவோதாசன் பூர்ணபலமுடையவனாலும் யுத்தஞ்செய்வதற்காற்றாது கீழ்த்திசையைப் நோக்கிப்புறங்காட்டி ஓடினான். ஹைஹயர்களும் தாலஜங்கர்களும் காசியைச்சின்னாபின்னப்படுத்தினார்கள். காசியிலிருப்பவர்கள்யாவரும் மிகவும் பயந்து பத்துத்திசைகளிலும் ஓடினார்கள். அந்த சத்ருக்களும் அப்படியோடுபவர்களைத் தொடர்ந்து துரத்தியடித்தார்கள். சிங்கநாதஞ் செய்தார்கள். ஆர்த்தார்கள். தடாரிபேரி முதலிய பலவாத்தியங்களை முழக்கினார்கள். தோள்தட்டிக் குதித்தார்கள்.

கிழக்குமுகநோக்கியோடிய திவேதாசன் சகிக்கமுடியாத துக்கத்துடன், இதன் விஷயந் தெரிந்து கொள்ளக் கருதி பரத்வாஜாச்சிரமத்தைக் குறித்துச் சென்றான். அவன் மூன்றாம் நாள் அங்குசென்று பரத்வாஜரைப்பணிந்து மிகவும் வியாகுலத்துடன் அவரெதிரே நின்றான். பரத்துவாஜர், அந்த திவோதாசனைப் பார்த்து இராஜ்யம், கோசம், சேனைகள், பிரஜைகள் இவைகளைப் பற்றி க்ஷேமம்விசாரித்தார். அதுகேட்ட திவோதாஸமகாராஜன், தாமரை மலரையொத்த, தன்னுடையமுகம் கண்ணீரால் நனைய விசனமுற்று அம்முனிவருடைய பாதங்களில் நமஸ்கரித்து எழுந்து கைகுவித்து நின்று பக்தியுடன் நடந்ததை ஆதியோடந்தமாகக் கூறினான்.

இதைக் கேட்டதும் பாத்வாஜமகாமுனிவர், சிறிதுவருத்த முற்று, "அரசனே விசனப்படாதே. மனவமைதியுடனிரு." என்று கூறி மீண்டும் கூறுகிறார். திவோதாசராஜனே! நீ தெரிந்தவனுயிருந்தும், நிலையற்றதான இந்தராஜ்பம் போனதைப்பற்றி வருந்துவது சரியல்ல. நீயே துக்கத்தை சகிக்காவிடில் பிரஜைகளுக்கு நாசந்தானுண்டாகும். சுகம்போல் தோன்றும் இந்த சம்சாரமானது துக்கவேதுவான தென்பதை நீயறியாததல்ல; இதில் அகப்பட்டவனுக்குச் சுகமேது. அரசனே! முன்செய்த கருமம் பலமுள்ளதென்று அறிந்தவன் துக்கத்தைச் சுகம்போற் கருத வேண்டும். இராஜனே! நீ செய்தது குற்றந்தான். ஆயினும் நீ பரமசிவகணத்துள் ளொருவராகிய நிகும்பதேவனை யல்லவா அவமதித்திருக்கிறாய்? அப்படியிருக்க உனக்குச் சுகம் எப்படியுண்டாம்? நீ அதை விரும்புவதுதான் சரியோ? விசாலாட்சியை இடப்பாகங்கொண்ட இறைவனாகிய விசுவேசருடைய நகரமாகிய இந்தக் காசிக்ஷேத்திரத்தில் எவனும் அவரது கணங்களையே சேவிக்கவேண்டும். அந்தக்கணங்களைப் பூசிக்கர்தவறின் அநேக விக்கினங்கள் நேரிடும். நீயோ அப்படிப்பட்ட கணங்களுள் ஒருவராகிய நிகும்பருடைய ஆலயத்தை உன் மதத்தால் அழித்தாய். அப்படியிருந்தும் நீ தொந்தரவின்றி யிருக்கும் தன்மையை விரும்புகிறாய்; அது எப்படிக் கிடைக்கும்? இராஜசிரேஷ்டனே! யாகத்தின் பொருளாகிய அவிர்ப்பாகத்தைப் புசிக்கும் பிரமாதி தேவர்களுக்கும் மகாதேவனது திருநகரமாகிய இந்தக் காசியம்பதியில் வசிக்கும் பாக்கியம் கிட்டுவதரிது. இந்தக் காசிக்ஷேத்திரத்தில், எவனேனும் வசித்து தெய்வநம்பிக்கையுடன் தனக்குரிய தருமங்களைச் செய்துவரின் பிர்மசொரூபத்தைபடைவான். குணமற்றதும், விகாரமற்றதும், பேதமற்றதுமாகிய பிர்மமே இங்கு காசிக்ஷேத்திரமாக விளங்குவது. இங்கு ஜகத்பதியும் மூன்று கண்களையுடையவனும் பார்வதிபதியுமாகிய ஈசன் சான்னித்தியமாக விளங்குகிறார். கிரீசனாகிய பரமசிவன் தமது மகிமையை விளக்க, க்ஷேத்திரவடிவமாகவும் தீர்த்தத்தின் ஆகிருதி

யோடும் விளங்குகிறார். அப்படிப்பட்ட க்ஷேத்திரத்தில் சிறிதும் தெய்வசிந்தனையில்லாத உனது சேனைகளுடன் நீ வசிக்கவிரும்புகிறாய். பூபாலனே! அது சித்திபெறுவது எவ்விதம்! என்றார்.

பிருகுமுனிவர் கூறுகிறார்.

இங்ஙனம் பரத்வாஜமுனிவர் கூறியதும் திவோதாஸன் துக்கத்தை யொழித்தான். தான் செய்த பெரும்பிழையை யறிந்து அதற்குத்தான் அடைந்த தண்டனையும் தகுமென்பதை யுணர்ந்தான். பிறகு அந்தக் காசியில் வசிக்க விரும்பி, முனிவரைப் பார்த்து, "பகவானே! காசியின் மகிமையைக் கேட்டு மகிழ்வுற்றேன். அங்கு வாசம் செய்ய என்மனம் மிகவும்நாடுகிறது. நான் அங்குஸ்திரமாக வாசஞ்செய்யவேண்டும். அதற்கு நான் அனுஸரிக்கவேண்டிய விதிகளைத் தயைசெய்து கூறவேண்டுகிறேன் என்றான்.

பரத்வாஜமுனிவர் கூறுகிறார்.

இராஜனே! நிகும்பதேவன் வாக்கு வீணாகாது. ஆகையால் நீ ஆயிரம் வருடம் சடந்தபின்பு ராகத்துவேஷங்களை விட்டு சிவபூஜையில் சிரத்தையுடனிருந்து பெரியோர்கள் கூறிய தேவர்கள் பாத்திரங்கள் முதலியவற்றை ஏற்படுத்திக்கொண்டு வாசம்செய்யலாம் என்றார். இதுகேட்ட திவோதாஸன், "முனிவர்களுக்குள் சிறந்த மகானே! ஜகத்பதியாகிய சிவபெருமானை எவ்விதம் பூசிப்பது? சங்கரனுக்குச் சந்தோஷமுண்டாக்குவது எப்படி? எனக்குச் சிவபூசைசெய்வதில் மிகுந்த ஆவலுண்டாகிறது. ஆகையால் அந்தக் கிரமத்தைத் தெரிவிக்கவேண்டும் என்று வினயத்துடன் கேட்டான்.

பரத்வாஜமுனிவர், நீ கேட்டது மிகவும் நல்ல கேள்வி. சந்தோஷம். சாவதானமாகக் கேள். பரமசிவன் நல்ல புத்தியுடையவனது நிர்மலமான இருதய தாமரையிலிருப்பவர். அந்தப் பரமகருணாநிதியை, சம்யமமாகிய ஜலத்தால் அபிஷேகம் செய்து தயவாகிய சந்தனத்தால் பூசித்து, காசியில் வாசமாகிய தூபம் கொடுத்து, ஞானமாகிய நீராஜனம் செய்து, ஆத்மாவை நிவேதனம் செய்யவேண்டும். இங்ஙனம் பரமசிவனைப் பூசித்தால் அவர் பிரஸன்னராவார். இதிலையமில்லை. சிதானந்தசொரூபமாகிய ஸ்தானத்தையும் அளிப்பார் என்றார்.

திவோதாஸன் முனிவர் பெருமானே! தாங்கள் என்னுடைய நன்மையைக்கோரி உபதேசித்தப்படி பரமசிவனைப் பூசை செய்கிறேன். மற்றொருவிஷயம் தாலஜங்கர்களும் ஹைஹயர்களும் செய்த அக்கிரமமான செய்கை எனக்குச் சகிக்க முடியாததாயிருக்கிறது. நினைக்குந்தோறும் என் மனம் கொதிக்கின்றது. ஓ பிராமண சிரேஷ்டரே! என் பகைவர்களாகிய அவர்கள் யாவரும் என் குமாரனால் வதமடையவேண்டும். அந்தப்படி தங்களுடைய அனுக்கிரகமுண்டாகவேண்டுகிறேன் "என்றான்.

இதைச் செவியுற்ற பரத்வாஜமுனிவர், இராஜ சிரேஷ்டனே! உனக்கு அவசியமாக நான் அந்தக் காரியத்தைச் செய்விக்கின்றேன். ஆகையால் நீ ஓர் புத்திரனையடையவேண்டியதன் பொருட்டு இஷ்டி செய்யவேண்டும். அதற்காகவேண்டிய வஸ்துக்களைத் துரிதத்தில் சம்பாதித்தலும் அவசியம் என்றார்.

## பிருகுமுனிவர்கூறுகிறார்.

இங்ஙனம் பரத்வாஜமுனிவர் கூறியதும் திவோதாசன் மனமகிழ்ச்சியடைந்து அவரைவணங்கித் துதித்து அவரிடம்

புத்திரகாமேஷ்டிக்குவேண்டிய பதார்த்தங்கள் இவைகள் என்பதைக்கேட்டுத் தெரிந்துகொண்டு, அவராக்ஞைப்படி எல்லா வஸ்துக்களேயும் சேகரித்தான். பிறகு பாத்வாஜமுனிவர் விதிப்படி புத்திரகாமேஷ்டியைச் செய்தார். அதன் பலனுக அவ்வாசனுக்கு ஓர் புத்திரன் பிறந்தான். அவனுக்குத் திவோதாசன் பிரதர்த்தனன் என்னும் பெயரிட்டு மிகவும் அன்பாய் வளர்த்து வந்தான். அவன் வயதையடைந்ததும் முனிவர் பிரான் அனுக்ரகத்தால் ஹைஹயர்களேயும் தாலஜங்கர்களேயும் எதிர்த்து அவர்களேப் போரில் வென்முன்.

முனிவர்களே! உத்தமமான காசியின் மகிமையை நான் உங்களுக்குக் கூறினேன். நீங்கள் இன்னும் கேட்கப் பிரயப்படுவதென்ன? தெரிவியுங்கள். கூறுகின்றேன் என்ருர்.

## ஐந்தாவது அத்தியாயம்.

### பிருகு முனிவர் கூறுகிருர்.

முனிபுங்கவர்களே! இவ்விதமாக ஜைமினிமுனிவர் கூறியதும் சம்வர்த்தர் மிகவும் மகிழ்ச்சியடைந்து, "ஜைமினிமுனிவரைப் பார்த்து, முனிவரே! நீர் காசிக்குச்சென்றவரல்ல. நீர் பேசுவதும் மிகவும் குரூரமாயிருக்கிறது. மகாமகிமையுடன் விளங்கும் வியாசர் தருமநெறியோடு கூடிய பேச்சைப்பேசட்டும். கிருஷ்ணத்வைபாயன ரென்னும் பெயர் கொண்டமுனிவர் மகா பாக்கியம் செய்தவரென்பதையானறிவேன். ஆயினும்அந்தவியாச முனிவருக்கு ஏற்பட்ட தரும விரோதமானசெய்கைஅவருக்கும் யுக்தந்தான் என்ருர். இதைக்கேட்ட வியாஸமுனிவர், சற்று யோசித்து உத்தமமான காசிக்ஷேத்திரத்தின் மகிமையைத்தமது

மாணாக்கர்கள் கேட்டுய்யும் பொருட்டு சம்வர்த்தரை நோக்கிக் கூறுகிறார்.

சம்வர்த்தமுனிவரே! தருமவிரோதமான செய்கையை நானெப்பொழுது செய்தேன். அதன் உண்மையைச் சொல்ல வேண்டும். பிரமதேவரும் தருமவிஷயத்தில் மோகமடைகிறார் என்றார்.

சம்வர்த்தர் கூறுகிறார்.

துவைபாயனர் என்னும் பெயர்கொண்ட முனிவர்களுக்குள் சிறந்தவியாசரே! இந்த கங்கைதீர்த்தங்களுக்குள் உத்தமமானது. இது க்ஷேத்திரங்களுக்குள் சிறந்தது. ஓவியாசமுனிவரே! இந்தக் காசியம்பதி தரிசனம் செய்த மாத்திரத்தில் பாபங்களைப்போக்கும் மகிமையையுடையது. முனிவரே! இங்கு வாசம் செய்பவர்களுக்குச் சீக்கிரத்தில் முத்திகிடைக்கும். இந்தக் காசிக்ஷேத்திரத்தில் மூன்றுராத்திரி உபவாசமிருந்தால், அநேகாயிரம் ஜன்மமெடுத்து அந்த ஜன்மங்கள்தோறும் அருந்தவம் புரியின் எந்தப் பலன் கிட்டுமோ அதைவிட மிகுதியானபலன் கிடைக்கும். வியாசரே! இந்தக் காசியில் மத்தியில் வசிக்கும் கிருமிக்கும் ஜக்தீசனாகிய சிவபெருமான் பிரம்மைக்கியத்தைக் கொடுக்கும் தாரக மந்திரத்தை உபதேசம் செய்கின்றார். மோக்ஷபலனைக் கொடுக்கும் உத்தமமான கர்மங்களை கோடி ஜன்மம் செய்யினும் வெகு பிரயாசத்துடன் மோக்ஷபலன் கிடைக்கும். இந்த க்ஷேத்திரத்திலோ, எவன் உயிரை விடினும் நற்கதி பெறுகிறான். இத்துணைச் சிறப்புவாய்ந்த இந்த க்ஷேத்திரத்திற்கு உமது மாணாக்கர்களுடன் சென்று கங்காதீர்த்தங்கலந்த சக்ர புஷ்கரணியில் ஸ்நானஞ்செய்து தேவதேவனும் ஸனாதனனுமாகிய பரமசிவனை நீர் பூசித்தவரன்று. இதுதான் நீர் செய்த

காரியங்களுள் தருமவிரோதமானது. ஆகையால் நீர் காசிக்குச் சென்று விதிப்படி சக்ரபுஷ்கரணியில் நீராடி அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சிவபெருமானைத் தரிசித்தல் அவசியமானது. தருமமறிந்த முனிவரே! நீர் சாஸ்திரமறியாதவரல்ல ஆகையால் நான் அந்த விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டியதென்ன விருக்கிறது என்றார்.

## பிருகு முனிவர் கூறுகிறார்.

சம்வர்த்த முனிவர் இவ்விதம் கூறியதும் வியாசமுனிவர், தமது மாணாக்கர்கள் பலருடன், காசிக்குச்சென்று விதிப்படி சக்ர புஷ்கரணீ தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து, கௌரீ, விக்நேசுவரர் இவர்களுடன் கூடிய விசுவேசரைப் பூசித்து முத்திமண்டபம் சென்று அங்குள்ள ஞானவாவியை நமஸ்கரித்து, அவணிற்றிருந்து ருத்ர சூக்தம் முழுவதையும் ஜபித்தார்.

இவ்விதம் ருத்திர சூக்தஜபம் செய்துவரும் வியாசமுனிவருடைய சத்துவகுணத்தை யறியக்கருதி ஜகத்பிரபுவாகிய பரமசிவன் கண்டவர் எவரும் நிந்திக்கத்தக்க ஒருருவங்கொண்டு ஸத்தியவதியின் புத்திரனாகிய வியாசமுனிவரிடம் அவருடைய மாணாக்கர்கள் பலர் சேர்ந்து தடுத்தும் நில்லாமல் பிரவேசித்தார். அதைக்கண்ட பராசர புத்திரனாகிய வியாசர் மிகச் சினமடைந்தார். பிறகு பரமசிவன் அவரிடம் வரமனமுடையவர்போல் காட்டிமறைந்தார்.

உடனே அந்த இடத்தில் பரம கருணாநிதியும் மறைமுடியில் வசிப்பவரும் ஒருவராலும் அடையமுடியாதவரும் உலகத்திற்கு க்ஷேமத்தை யுண்டு பண்ணுகிறவருமாகிய பரமசிவன், களங்கமற்ற பதினாயிரம் சரத்கால சந்திரனை யொத்து ஒளி வீசாநின்ற மேனியுடனும், சந்திரன், சூரியன், அக்கினி இவை

களை நேத்திரங்களாகக்கொண்டு பத்துக்கைகளுடனும், பார்வதி தேவியை வாமபாகத்திலுடைய வராயும் ஆவிர்பாவ மடைந்தார்.

இவ்விதத் திருக்கோலத்துடன் விளங்காநின்ற எம்பெருமானைக்கண்ட வியாசரும், அவரது மாணாக்கர்களும் விதிப்படி வணங்கி, அநேக விதமாகத் தோத்திரஞ் செய்தனர். பிறகு பரமசிவன் கோபங்கொண்டவர்போல் வியாசமுனிவரை நோக்கி, "வியாச முனிவரே! நீர் வெளியேசெல்லும். இனிச்சிறிதும் நீர் இங்கு தாமதிக்கலாகாது. இராகம் துவேஷம் இவைகளுடன் கூடியவர்கள் எனது புரியாகிய இந்தக்காசியில் வசிக்கலாகாது. மகா புத்திசாலியாகிய முனிவரே! நீர் என்னையே சரணமென அடைந்தமையாற்றான் இப்படி உமக்கு இதமாகக் கூறுகிறேன். ஆகையால் நீர் இந்தக்கணம் இந்தக் காசியைவிட்டு அப்புறப்பட்டு அங்கிருந்து என்னையே கதியென நம்பிப் பூசை புரிந்து வருவீராயின் பிறகு இந்தக் காசியில் வசிக்க போக்கியமுடையவராவீர்" என்றனர்.

இங்ஙனம் சிவபெருமான் திருவாய்மலர்ந் தருளியதும் வியாச முனிவர் சீடர்களுடன் பரமசிவனுடைய ஆக்ஞைப்படி அந்தக் காசியைவிட்டு வெளியேவந்து, அங்கு ஓர் ஆச்சிரமமேற்படுத்திக்கொண்டு அதிலேயே வாசஞ்செய்தார்.

முனிவர்களே! நீங்கள் கேட்டபடி நான் கூறினேன். இராகம் துவேஷம் இவைகளை விட்டவர்களே இந்தக் காசியம்பதியில் வாசஞ்செய்ய வேண்டும். இவைகளன்றி ஓர் கணக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள். மத்திய மேசுவரர் முதல் தேஹளி விக்நேசுவரர் வரையில் நூலைக்கட்டி, நான்கு திசைகளிலும் மண்டலாகாரமாகச் சுற்றினால், எங்கு எந்த ரேகையேற்படுறதோ அதன் மத்தியே உத்தமமான க்ஷேத்திரமென்றறிய வேண்டும். அதைத்தான் தேவர்கள் காசியென்று கூறுகிறார்கள். அங்கு முத்திகிடைப்பது நிச்சயம். அந்தக் காசிக்குள் விசேஷ

பலனைக் கொடுக்கும் இலாக்கியமான மற்றொரு க்ஷேத்திரமிருக்கிறது. அது வாரணாசியெனப்படும். அதன் எல்லையைக் கூறுகிறேன் கேளுங்கள்.

தெற்கிலும் வடக்கிலும் நதிகள்; கிழக்கில் வாரணாசி; மேற்கில் கங்கை; பாசத்தைக் கையிலேந்திய விநாயகர். அந்த வாரணாசிக்கு உள்ளடங்கியதும் விசேஷபலனை யளிக்கக்கூடியதுமாகிய க்ஷேத்திரமொன்றுண்டு. அது விசுவேசருக்கு நான்கு பக்கங்களிலும் இருநூறு விற்கடையளவுள்ளது. அது அவிமுக்த க்ஷேத்திரம். அது மோக்ஷமளிக்கக்கூடியது. இதிற் சிறிதும் சந்தேகமில்லை என்றார்.

இங்ஙனம் காசியின் மகிமையை விவரித்த பிருகுமுனிவரை முனிவர்கள் பார்த்து முனிவரே! பரமசிவனுக்கு நான்கு விதமான ஸ்தானங்கள் கூறினீர்களல்லவா? அங்கங்கு மரணமடைபவர்கள் என்னென்ன பலனை யடைவார்கள் என்றார்கள்.

---

## பிருகு முனிவர் கூறுகிறார்.

முனிவர்களே! இந்த நான்கு க்ஷேத்திரங்களில் எதில் மரணமடையினும் அவன் கருவிலுருவாகிப்புவியிற் பிறந்து அவதியை யடையமாட்டான். ஆயினும் அவை ஒவ்வொன்றும் சில விசேஷங்களையதிகமாகக் கொண்டிருக்கின்றன. காசியில் மரித்தவன், சாக்ஷாத்தாக பரமசிவன் உலகம் அடைவான். பின்னர் பரமசிவனது ரூபம் பெறுவான். பிறகு சாமீபமடைவான். கடைசியாக, பரபிர்மத்துடன் ஐக்கியமாவான். மீண்டும் திரும்பான். வாரணாசியில் மரித்தவன் சாக்ஷாத்தாகப் பரமசிவன் ரூபமடைவான். பிறகு சிவன் சாமீபத்தையும் பிறகு பிர்மைக்கியத்தையும் பெறுவான். அவிமுக்த க்ஷேத்திரத்தில் மரித்தவன், சாக்ஷாத்தாக சிவன் சாமீபமடைவான். பிறகு சிதாநந்த ரூபமாகிய பிர்மத்தினிடம் லயமடைவான். ஒவ்வொரு கற்பத்தோறும் சிவன் லோகத்தையும் ரூபத்தையும் சாமீபத்தையுமடைந்து, பிறகு

பிர்ம்ம சொரூபம் பெறுகிறான் என்றார். முனிவர்கள், வேதார்த்தங்களின் உண்மை உணர்ந்த பெரியவரே! நீங்கள் கூறியதை நாங்கள் கேட்டு நிச்சயம்செய்து கொண்டோம். இதற்குமேல் ஞானமுண்டாகும் மார்க்கத்தைக் கூறவேண்டும் என்றார்கள்.

பிருது முனிவர், நான்கு பிரிவினையுடனிருக்கும் இந்தக் காசியம்பதியில் பரமசிவன், பிர்ம்மைக்கியத்தை யருளும் தாரகமந்திரத்தை உபதேசம் செய்கிறார். ஆயினும் அங்கங்கு மரித்தவனுக்கு போகமும் மோக்ஷமும் கிடைக்கின்றன. அதுதான் ஜீவன் முக்தனுடைய அவஸ்தை. உள்ளிருக்கும் கிருகத்தில்மிகுதியான யத்தனத்துடனிருந்துவரின்சாக்ஷாத்தாக மோக்ஷம் அடைவான். அப்படிப் பெறுதற்கு உபாயம் கூறுகிறேன் கேளுங்கள்.

ஆயிரக்கணக்கான ஜன்மங்களடைந்து, அந்தந்த ஜன்மங்களில் அறநெறி வழுவாதிருந்து அப்படிச்செய்து வரும் தருமங்களை ஈசுவரார்ப்பணமாக அளித்து அதனால் விசுவேசருடைய நகரமாகிய காசியில் வாசம் செய்யும் பாக்கியத்தைப் பெறவேண்டும். பரசிவ ஆராதனையாலன்றி மற்றெந்த சாதனங்களாலும் அந்த க்ஷேத்திரவாசம் கிடைப்பதரிது. இது சம்பந்தமான இரகசியம் ஒன்று கூறுகிறேன் கேளுங்கள். இந்த க்ஷேத்திரத்திற்குச் சமமான க்ஷேத்திரம் வேறொன்றுமில்லை, மூவுலகிலும் கிடையாதென்றறியுங்கள், இது சத்தியம்! இங்கு சரீர நாசத்தையடைய விரும்பிசுவதருமந்தவறாதிருக்கவேண்டும். சிறிதும்பாபம்புரிதல் கூடாது. சாவதானக் குறைவால்நேரிடும் பாபம்தொலைவதற்குத் தினந்தோறும்ஒவ்வொருபிராணியையும்விசுவநாதருடைய ஆலயத்தையும் பிரதக்ஷிணம் செய்யவேண்டும். உத்தராயணத்திலும் (தைமாதப்பிறப்பு) தக்ஷிணாயனத்திலும் (ஆடிமாதப்பிறப்பு) வாராணசியைப்பிரதக்ஷிணம்செய்யவேண்டும். வருடத்திற்கொருமுறையேனும் காசியை வலம்வரவேண்டும். ஒவ்வொரு பிராணியிடத்திலும் நாற்பத்திரண்டு லிங்கங்களை ஆவாகனம் செய்து பூசிக்கவேண்டும். பரமசிவ சொரூபமாகிய பிராணியிடம் பதினான்கு

லிங்கங்களைப் பூசிக்கவேண்டும். எப்போதும் ருத்திர சூக்தத்தை ஜபம் செய்யவேண்டும். ருத்திர மந்திரத்தை தியானம் செய்யவேண்டும். இந்திரிய நிக்ரகம் செய்தவரெவராயினும் அவரை ருத்திர சொரூபமாகப் பாவனை செய்யவேண்டும். வைராக்கியம், ஸ்திரீசங்கமம், ஆவேஷம், டம்பம், முதலியவைகளை யொழித்து காசியில் வாசஞ்செய்து வந்தால், பிர்ம்ம சொரூபத்தைப் பார்ப்பான்.

பிராமண சிரேஷ்டர்களே! மகாதீர்த்தமாகிய கங்கையையுடைய காசியில் மோக்ஷங் கிடைப்பதில் தடையுண்டோ? அந்தணர்களே! சரீரத்தை யொழித்தவர்களுக்குக் கங்கை யொன்றுமே முத்தி கொடுக்கின்றது. கங்கையில் ஆயுளை முடியப்பெற்றுப் பாபங்களொழிந்தவனெவனாயினும் முத்தி கிடைப்பது நிச்சயம். சிதாநந்த சொரூபமாகிய பரபிர்மமே கங்கையாகப் பரிணாமத்தை யடைந்திருக்கிறது. இது விஷயமாக நீங்கள் சந்தேகங்கொள்ள வேண்டாம். நான் சத்தியமாகக் கூறுகிறேன். இந்தக்கங்கை சச்சிதானந்த சொரூபனும் அசிந்தியனும் அநிர்வசனீயனுமாகிய சிவபெருமானிடம் உண்டானவள். புண்ணியத்தைபுண்டுபண்ணுகிறவள். இந்தப் புவியிலுள்ள மற்ற நதிகள் யாவும் கங்கையின் கலையிற் வியாபித்திருந்து தான் பரிசுத்தமடைகின்றன. சமுத்திரம் முன்னம் அகஸ்தியமுனிவரால் பானம் செய்யப்பட்டகாலத்து, இந்த கங்கையின் பிரவாகத்தால் நிறைந்தது.

இவ்வளவு மகிமையுடைய பாகீரதி யானவள், முத்தியைக் கொடுக்கும் பரமசிவன் க்ஷேத்திரத்தில் விளங்குகிறாள். அந்தண சிரேஷ்டர்களே! இந்த ஒவ்வொன்றும பிரமசொரூபத்தையடையச் சாதனமாக வேற்பட்டது. தீயமார்க்கத்திலிருந்து பாபகருமங்களையே செய்பவனொருவனுடைய எலும்புத்துண்டு தெய்வகதியால் இந்த கங்கையில் விழுந்தாலும் அப்போதேஅவனுடைய பாபங்கள் யாவும் ஒழியும். அவன் அறுபதினாயிரம் வருஷம் சொர்க்கலோகத்திலிருந்து தேவபோகத்தை அனுபவிப்பான்.

பயங்கரமான சம்ஸார பந்தத்தை நீக்கத் தீர்த்தங்கள் யாவுஞ்சேர்ந் துள்ள இந்த ஆகாய நதியிருக்கையில் எவன் இந்தக்காசியைச் சேவிக்க மறுப்பான்.

முனிவர்களே! இந்த உத்தமமான காசியின் மகிமையை உங் களுக்குக் கூறினேன். இந்த மாகாத்மியத்தைக் கேட்டவுடன். பாபங்களெல்லாவற்றினு மிருந்து விடுபடுகிறான் என்றார்.

சூதபுராணிகர் கூறுகிறார்.

ஓ சௌனகமுனிவரே! இவ்விதம் பிருகுவம்சத்திற் பிறந்த பிருகுமகா முனிவரால் எல்லோருடைய நன்மையை விரும்பி பர சிவனது பதியாகிய காசியின் மகிமை கூறப்பட்டது. இந்த மாகாத்மியத்தைக் கேட்டவுடன்பாபக்கூட்டமாகிய கூடு நெருப்பி லிட்ட பஞ்சுபோல் நாசமாய் விடும். இந்த மாகாத்மியத்தை ஆசையின்றிப் பாராயணம் செய்யவேண்டும். அவ்விதம் செய் தால் பாபபரிகாரமும் பரமசிவனுடைய பிரீதியும் கிடைக்கும். "இந்த மாகாத்மியந்தான் மேலானதத்துவம். இது தான் உயர்ந்த தத்வம்" எனக்கருதி மற்றவிடங்களில புத்தியைச் செலுத்தாமல் பிரயத்தனத்துடன் பாராயணம் செய்யவேண்டும். இதைப்பாரா யணஞ் செய்தால் அநாதி முதல் வணங்கிப் பரமசிவன் பரமானந்த மடைந்து,மனோபீஷ்டங்களைப் பூர்த்திசெய்கிறான். இது விஷயத் தில் விசாரிக்கவே வேண்டியதில்லை. தினந்தோறும் நூற்றெட்டு ஜலலிங்கங்களைப் பூசித்து, நியமத்துடன் காசியின் மகிமையை சிரவணம் செய்பவன் நற்குணங்கள் அமைந்தவனும் தீர்க் காயுளுடையவனும் மிகுதியான சம்பத்துடையவனும் பரம சிவனைப் பூசிப்பதில் சிரத்தையுள்ள வனுமாகிய புத்திரனை யடை வான்.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பத்மபுராணம் பாதாளகாண்டத்தில் பிரதிபாதித்திருக்கும்

காசிமாகாத்மியம் முற்றிற்று.

76
1564

# ஆனந்த ராமாயணம்.

இதுவரையில் தமிழில் வெளிவராதது.

இது வால்மீகி மகாரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டது. இதைத் தமிழில் மொழி பெயர்த்து 14-சஞ்சிகைகளாக வெளியிட்டிருக்கிறோம். இதில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன. இது ஆனந்தராமாயண மென்ற இதன் பெயருக்கொத்தபடி படிப்போர்மனதிற்கு உற்சாகமும் ஆனந்தமும் உண்டாக்கு மென்பதில் தடையில்லை. ஒவ்வொரு சஞ்சிகையிலும் சித்திரப்படமொன்று அமைத்து வெயிடப்பட்டிருக்கிறது. புத்தகம் முடிந்துவிட்டது காலிகோ பைண்டு செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. விலை ரூ. 5. தபாற்கூலி வேறு.

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| பத்து பாரம் கொண்ட சஞ்சிகை ஒன்றுக்கு | 0—6—0 | தபாற் கூலி வேறு |
| மூன்று மாதத்துக்கு | 1—0—0 | |

# ஸ்ரீமத் பாகவதம்.

தசமஸ்கந்தம் முடிவாய்விட்டது

ஸ்ரீமத் பாகவதமானது, சதுர்வித புருஷார்த்தங்களுள் பிரதானமான மோக்ஷ சாம்பிராஜ்யம் பெறுவதற்கு இன்றியமையாத சாதனமாகிய பகவத்பக்தி புகட்டத்தக்க அரிய நூலென்பது யாவரும் அறிந்த விஷயம். இத்தகைய கிரந்தம், தமிழ், சம்ஸ்கிருதாபிமானிகளாகிய நம்மவர் ஒவ்வொருவர் கிரகத்திலுமிருப்பது அவசியமென்பதை யுத்தேசித்து ஸ்ரீதரீய வியாக்கியானத்துடன் மூலசுலோகமும் அந்த மூலத்துக்கேற்ற தமிழ் மொழி பெயர்ப்பும் அச்சிட்டு, சஞ்சிகை ரூபமாக வெளிப்படுத்த முதலில் ப்ரதமஸ்கந்தத்தை ஆரம்பித்தோம் இப்பொழுது தசமஸ்கந்தம் பூர்த்தியாகி விற்பனைக்குத் தயாராய்விட்டது. 104 -பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தில் ஒன்பது சித்திரப் படங்கள் நன்கமைந்திருக்கின்றன. புஸ்தகம் கலிகோ பைண்டுடன் கூடியது.

விலை ரூபா. 6-0-0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

எ. வி. ஐயர் அண்டு கம்பெனி.

நெ. 117, பெரிய தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை,